15.6.'56

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



# செய்திகள்

## சர்வதேசக் குழந்தைகள் தினம்

ஜூன் மாதம் முதல் தேதியன்று சென்னை, கோகலே ஹாலில் சர்வதேசக் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. கனம் நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர் அவர்கள் விழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார். குழந்தைக் கவிஞர், கல்கண்டு ஆசிரியர், அணில் ஆசிரியர், கண்ணன் ஆசிரியர் முதலியோர் கலந்து கொண்டு, சொற்பொழிவாற்றினார்கள்.

## ஸ்ரீ நடராஜா கல்விக் கழகம்

திருவல்லிக்கேணியில் இலவச வாசகசாலை நூல் நிலையமான ஸ்ரீ நடராஜா கல்விக் கழகத்தின் பதினோராம் ஆண்டு நிறைவு விழா ஜூன் 8-ஆம் தேதி தொடங்கியது. முதல் நாள் சிறுவர் நூல் நிலையத்தை, கனம் நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர் அவர்கள் திறந்துவைத்தார்கள். குழந்தை எழுத்தாளர்கள் பலர் வந்து கலந்துகொண்டார்கள்.

## மிகச் சிறிய டெலிவிஷன் காமிரா

அமெரிக்க நாட்டில் லாக்ஹீட் விமான என்ஜினியர்கள் மிகச் சிறிய டெலிவிஷன் காமிரா ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் அளவு 1¾ அங்குலமும், 2 அங்குலமும், 5 அங்குலமுமாகும். 1½ பவுண்டு எடையுள்ள இதற்கு டெலிகாஸ்டர் என்று பெயர். இதை விமானங்களுக்குள்ளேயே 27 அங்குலத் திரையில் படமாகக் காட்டமுடியும். பார்ப்பதற்குக் கஷ்டமான இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காட்ட இது பயன்படுகிறது.

## இந்திய சைக்கிள்கள்

ஐந்தாண்டுத் திட்டத்தில் நாலாவது வருஷத்து வேலை இப்போது நடந்து வருகிறது. இது முடிந்ததும் 57-58-இல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகும். அப்பொழுது வருஷத்துக்கு 2½ லட்சம் சைக்கிள்கள் வீதம் ஐந்து வருஷங்களில் பன்னிரண்டரை லட்சம் சைக்கிள்கள் உற்பத்தியாகும் என்று நம்புகிறார்கள். எவ்வளவு தயாரானாலும் விலை குறையுமா என்பதே நம்முடைய கவலை அல்லவா?

## இந்திய ரெயில்வே

இந்த நாட்டின் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருந்துவரும் மிகப் பெரிய தொழில் ஸ்தாபனம் ரெயில்வேயாகும். இந்த நாட்டு ரெயில் பாதைகளின் மொத்த நீளம் 35,000 மைல்கள். இதன் மூலதனம் 974 கோடி ரூபாய். இன்னும் சில ஆண்டுகளில் ஒன்பதாயிரம் மைல் நீளமுள்ள புதியபாதை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

## ராஜ்ய கூடைப்பந்துப் போட்டி

மே மாதக் கடைசி வாரத்தில் ராஜபாளையத்தில் இரண்டாவது ஆண்டு ராஜ்ய (பாஸ்கட் பால்) கூடைப்பந்துப் போட்டி நடைபெற்றது. இதில் 32 குழுவினர் கலந்துகொண்டார்கள். இறுதிப் போட்டியில் பெங்களூர் ஒய். எம். எம். ஏ. குழுவினரும் ராஜபாளையம் நகரக் குழுவினரும் கலந்துகொள்ள நேர்ந்தது. அதில் பெங்களூர் குழுவினர் 63 பாயின்டுகள் எடுத்து வெற்றி வாகை சூடினார்கள். ராஜபாளையம் 51 பாயின்டுகள் எடுத்தது.

# கண்ணன்



## பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 12

15 - 6 - '56

| | |
|---|---|
| குழந்தைகளே! | பக்கம் 2 |
| ஜால வித்தை | .. 3 |
| ரேடியோ விமரிசனம் | .. 4 |
| சைனு சு - சூ! | .. 5 |
| என் புனைபெயர்கள் | .. 11 |
| தங்கச் சங்கிலி | .. 13 |
| கவியரங்கம் | .. 18 |
| அன்புள்ளம் | .. 19 |
| எண்ணிலே படங்கள் | .. 22 |
| பொய் சொல்லாதே! | .. 23 |
| காலம் மாறும் | .. 27 |
| துறவரசர் இளங்கோ | .. 29 |
| மண் தின்ற கண்ணன் | .. 32 |
| போட்டி | .. 35 |
| புலிக்குட்டி | .. 38 |

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ண
செய்திகள் - 2 - அட்டை.
கிளைக் கழகம் 3 அட்டை.

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## ஆள் மாறாட்டம்

எங்கள் வகுப்புக்குக் கும்பகோணத்திலிருந்து புது உபாத்தியாயினி வருவதாக இருந்தது. ஒரு வாரத்திற்கு முன்பு புதிதாக வந்து சேர்ந்திருந்த உஷா மகா குறும்புக்காரி. அவள், தனக்குப் புதிய உபாத்தியாயினியைத் தெரியும் என்றும் அவள் குள்ளமாகவும் சற்றுப் பருமனாகவும் இருப்பாள் என்றும் மகா முன்கோபக்காரி என்றும் கூறினாள்.

பிரார்த்தனை முடிந்ததும் எங்கள் பள்ளிக்கூடப் பியூன் ஒரு பெண்ணை அழைத்து வந்தான். அவள் உஷா வருணித்தபடி இருந்ததால் நாங்கள் உடனே எழுந்து நின்று மரியாதை செய்தோம். அவள் சற்று நின்றபடியே சுற்றுமுற்றும் பார்த்தாள். முகத்தில் கோபக்குறி தெரிந்தது. எங்கள் வகுப்புத் தலைவி, ''டீச்சர், அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டாள். அவள் தன்னைக் கேலி செய்வதாக நினைத்து, ''உங்கள் போக்கிரித்தனத்தை என்னிடம் காட்டவேண்டாம். அது என்னிடம் பலிக்காது'' என்று சொல்லி என் பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.

இதற்குள் அறையின் வாசலில் ஒரு பெண் வந்து நின்றாள். அவளை வேறு உயர்ந்த வகுப்பு மாணவி என்று நினைத்தோம். அவள் வகுப்பைச் சற்றுநேரம் வெறித்துப் பார்த்துக்கொண் டிருந்துவிட்டு, விடுவிடுவென்று சென்றவள் சற்று நேரத்தில் தலைமை ஆசிரியையுடன் வந்தாள். தலைமை ஆசிரியை எங்களைப் பார்த்து, ''நீங்கள் நான்காம் படிவம் படித்துக்கொண் டிருந்தும் சிறிதும் மரியாதை தெரியவில்லையே. உபாத்தியாயினி வந்தால் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டாமா?'' என்று சினந்தார்.

அப்பொழுதுதான் எங்களுக்கு நாங்கள் செய்த தவறு தெரிந்தது.

—சுகந்தா, மாயூரம்.

# குழந்தைகளே!

இந்த இதழை நீங்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறீர்கள் என்பதை உங்கள் கடிதங்களிலிருந்து தெரிந்து கொண்டேன். ஆனால் அதே சமயத்தில் என்னுடைய ஆவலை இங்கே முதலில் சொல்லிவிடுகிறேன். அநேகமாக எல்லா இடங்களிலும் பள்ளிக்கூடங்கள் திறந்துவிட்டார்கள். பரீக்ஷையில் தேறிய உங்களையெல்லாம் முதலில் பாராட்ட வேண்டுமென்பதே என் பேராவல். ஆகவே என் பாராட்டுக்களை முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள்.

புதிய தொடர்கதையான சைனா சு-சூவைச் சந்திக்க உங்களுக்கு எவ்வளவு ஆவலுண்டோ, அவ்வளவு ஆவல் எனக்கும் உண்டு. இதை ஆறு வயதுக் குழந்தை முதல் அறுபது வயதுக் குழந்தைகள் (!) வரையில் படிக்கலாம்; ரஸிக்கலாம். படிக்கப் படிக்க, கதை எல்லாருடைய கருத்தையும் கொள்ளை கொண்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை. அடுத்த இதழ் எப்போது வரும் என்று ஆவலோடு கேட்கும்படி, கதைப் போக்கு அத்தனை சுவாரஸ்யமாகப் பின்னப்பட்டிருக்கிறது. எதையும் முன்னாலேயே சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடாது அல்லவா?

அடுத்தபடியாகச் சித்திரப் போட்டியைப்பற்றிச் சில வார்த்தைகள்: இதுவரை (12-6-56) சுமார் 850 சித்திரங்களுக்குமேல் வந்துள்ளன. இன்னும் நூறு சித்திரங்களாவது இரண்டு நாளில் வரக்கூடும் என்று எதிர்பார்க்கிறேன். சிலர் போட்டியின் தேதியை இன்னும் பதினைந்து நாள் தள்ளிப்போடவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது சாத்தியமில்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போட்டி என்று வைத்து, முடிவுத் தேதியையும் குறிப்பிட்ட பிறகு தகுந்த காரணங்கள் இல்லாமல் தேதியை ஒத்திப் போடுவதை நான் விரும்பவில்லை. இதுவே நமக்கு பழக்கமாகி விடவும் கூடாது. தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் சித்திரப் போட்டியில் கலந்துகொண் டிருப்பதைப் பார்க்க எனக்கு ஒரு புறம் மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. இன்னொரு புறம் பயமாகவும் இருக்கிறது. எப்படி இவ்வளவையும் எவர் மனமும் கோணாமல் எடைபோட்டுப் பார்த்துப் பரிசு கொடுக்கப் போகிறோம் என்று கவலையாக இருப்பதைத்தான் சொல்கிறேன். ஆனால் எது எப்படிப் போனாலும் அடுத்த இதழில் இந்தப் போட்டியின் முடிவைக் கண்டிப்பாக நீங்கள் எதிர்பார்க்கலாம்,

முன்பு தெரிவித்திருந்ததற்கு இணங்க, தொடர்கதைப் போட்டிக்குரிய கதைகளும் ஒவ்வொன்றாக வந்துகொண்டிருக்கின்றன. போட்டிக்குரிய தொடர்கதைகள் இங்கே கிடைக்கவேண்டிய கடைசித் தேதி 31-7-56 என்பதை மீண்டும் ஞாபகப்படுத்தி வைக்கிறேன். தொடர்கதையை, காகிதத்தின் இரண்டு பக்கமும் எழுதாமல் ஒரே பக்கத்தில் தெளிவாக இடம் விட்டு மையினால் எழுதுங்கள். பென்சிலால் எழுதிவிடாதீர்கள். பக்கங்களை மேலே தொடர்ச்சியாகப் போட்டு, நன்றாகத் தைத்து, ஏடு ஏடாக வராதபடி நல்ல முறையில் அனுப்புங்கள். பரிசு பெறாத கதையைத் திரும்பப் பெற விரும்புபவர்கள் போதிய தபால் தலை வைத்து அனுப்பவேண்டும். தபால் தலைகள் இல்லாத கதை திருப்பியனுப்பப்பட மாட்டாது. எல்லாம் செய்துவிட்டு, உங்கள் முகவரியை எழுத மறந்துபோகாதீர்கள். தெளிவாக எழுதி அனுப்புங்கள். தொடர்கதைப் போட்டிக்கு யார் வேண்டுமானாலும் எழுதலாம். இதில் வயது எல்லை எதுவும் கிடையாது. பேரனும் எழுதலாம்; தாத்தாவும் எழுதலாம். பேத்தியும் எழுதலாம்; பாட்டியும் எழுதலாம். ஆனால் ஒருவர் இரண்டு கதைகளுக்கு மேல் மட்டும் தயவு செய்து அனுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்: கண்ணனில் நாற்பது முதல் ஐம்பது பக்கங்களுக்கு மேல் போகாமலும் இருக்கும்படி கவனித்துக்கொள்ளுங்கள்.

மீண்டும் பதினைந்து நாளில் சந்திப்போம்.

ஆசிரியர்

# ஜால வித்தை

## எஸ். டி. முகர்ஜி

“நீ பல வித்தைக்காரர்களைப் பார்த்திருப்பாய். பிரபல மாய வித்தைக்காரர் ஸர்க்காரைப் பற்றியும் கேள்விப்பட்டிருப்பாய். அவர் புகைப்படம்தான் உனக்குத் தெரி



யுமே. எங்கே, நான் 4, 5 புகைப் படங்கள் காண்பிக்கிறேன், அவைகளில் ஸர்க்கார் யார் என்று கண்டுபிடி, பார்க்கலாம்!'' என்று புகைப் படங்களைக் காண்பி. படங்களைப் பார்த்து, ஸர்க்காரைக் காணோமே என்று எல்லாரும் விழிப்பார்கள். அவைகளை எதிரில் உள்ள நீரில் கழுவு. பிறகு காண்பி. இப்போது எல்லாரும் ஸர்க்காரின் படம் எது என்று சொல்லிவிடுவார்கள்.

இப்போது அவர் புகைப்படம் எப்படி வந்தது என்று கேட்கிறீர்களா? எல்லாம் தந்திரம்தான். ‘மந்திரம் கால், மதி முக்கால்’ என்பார்களே! அதே கதைதான். ஸர்க்காருக்குத் தாடி கிடையாது என்று எல்லாருக்கும் தெரியும். ஆகையால் முதலில் காண்பிக்கும்போது ஸர்க்காரின் புகைப்படம் அயோடின் ரசாயனப் பொருளின் உதவியால் வரையப்பட்டிருந்த தாடியுடன் காணப்பட்டது. பிறகு அதை எதிரில் உள்ள கிண்ணத்தில் புகைப்படக்காரர் உபயோகிக்கும் ஹைபோ திரவம் கலந்த நீரில்—கழுவினோம். அந்தத் திரவம் கலந்த நீரில் அயோடின் கரைந்துவிட்டது. பிறகு எடுத்துக் காண்பிக்கும்போது தாடி மறைந்து போய்விட்டபடியால் ஸர்க்காரின் புகைப்படத்தை எளிதில் எல்லாரும் கண்டுபிடித்து விட்டார்கள்.

(குறிப்பு) ஸர்க்காரின் புகைப் படத்துக்குப் பதிலாக உங்கள் நண்பர்களில் ஒருவருடைய புகைப் படத்தை, அவர் அனுமதியின் பேரில், உபயோகப்படுத்தலாம்.

### அத்தர் வாசனை!

அத்தர்களில் எத்தனை விதம் உள்ளன! ரோஜா, மல்லிகை, தாழம்பூ இன்னும் பற்பல. அவற்றில் சில அத்தர்களில் ஒரு சில துளிகள் பருத்தியில் விட்டு யாருக்கும் தெரியாமல் உங்களுடைய காதில் வைத்துக்கொண்டு விடுங்கள். பிறகு கையில் கொஞ்சம் பஞ்சு எடுத்துக்கொண்டு, உங்கள் நண்பர்களில் ஒருவனை அருகில் கூப்பிடுங்கள். மனத்தில் ஏதேனும் ஒரு புஷ்பத்தின் அத்தரை நினைத்துக்கொள்ளச் சொல்லுங்கள். கையில் உள்ள பஞ்சில் நுனி



விரலால் நன்றாகத் தேய்த்துவிட்டு உங்கள் நண்பனிடம் கொடுத்து அவன் நினைத்த வாசனை அதில் வருகிறதா என்று பார்க்கச் சொல்லுங்கள். உண்மை தெரியாதவரை 100-க்கு 99 பேர்கள் அதிலிருந்து நினைக்கும் வாசனை வருவதாக நம்புவார்கள். எப்படி, தந்திரம்! செய்து பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். அப்போதுதான் உங்களுக்கும் விளங்கும்!

# ரேடியோ விமரிசனம்

## சிறுவர் நிகழ்ச்சி

**5-5-56** நிகழ்ச்சியில் திரு ராஜாஜி கூறிய 'இரு மூடர்கள்' என்ற கதை நன்றாக இருந்தது. 'சந்திரமதி' என்ற நாடகம் ஆரம்பத்திலேயே கேட்போர் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. தளபதியாக நடித்தவரின் நடிப்பு அபாரம். 'பாலைவனம் சோலைவனமாக வேண்டும்' என்றப் பாட்டு, செவிக்கு அமுதமாய் இருந்தது. பெரியவர்களிடம் மரியாதையாகப் பேசவேண்டும் என்ற சிறந்த கருத்தை, சுப்பிரமணிய பாரதியாரின் கதை எங்களுக்குத் தந்தது. 'நீயும் நானும்' என்ற கதை பாப்பாவுக்குச் சுத்தத் தமிழில் பேசக் கற்றுக்கொடுப்பது எப்படி என்பதை விளக்கியது. 'ஆமையும் முயலும்' என்ற பாட்டும் 'சித்தெறும்பு செய்த உதவி' என்றக் கதையும் பிரமாதம். கடைசியில் சுசீலா, சாந்தி இவர்கள் பாடிய 'சிதம்பரம் சேவிக்க வேண்டுமையா' என்ற பாட்டு உணர்ச்சியை ஊட்டும் வகையில் இருந்தது.

—எம். சண்முகம், திருவத்திபுரம்.

## மணி மலர் (6-5-56)

'ஊருக்கு நல்லது சொல்வேன்' என்ற பாரதியார் பாடலை சிறுவர்-சிறுமிகள் மிகவும் நன்றாகப் பாடினார்கள். ஜாதகக் கதைகளில் ஒன்றான 'கருமிக் கதை' நல்ல நீதியைப் போதித்தது. வானொலி அண்ணா, 'பாரத ரத்தினம்' என்ற தலைப்பில் நம் தலைவர் ஸ்ரீ நேருவின் தந்தையான ஸ்ரீ மோதிலால் நேருவைப்பற்றிச் சில சுவாரஸ்யமான சம்பவங்களைச் சொன்னார். அதைக் கேட்கக் கேட்க இன்னும் கேட்டுக் கொண்டே யிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இதிலிருந்து நம் நேருவின் பாட்டனார் பெயர் கங்காதர நேரு என இன்றுதான் தெரிந்து கொண்டேன்.

அடுத்து, கவிதைச் சோலையில் பாடப்பட்ட 'இன்பத் தமிழ் என்னும் போதில்' என்ற பாடல் மிகவும் இனிமையாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. 'ஆடிடுவோம் விளையாடிடுவோம்' என்ற பாடல் சுமாராக இருந்தது. நதிப் பாட்டு பரவாயில்லை.

—M. நடராஜன், குகை, சேலம்-1.

## மணி மலர் (13-5-'56)

ஆரம்பத்தில் சிறுவர்கள் சேர்ந்து பாடும் பாட்டு சுமார்தான். ஜாதகக் கதைகளிலிருந்து ரேடியோ அண்ணா கூறிய 'ஓநாயின் எச்சரிக்கை' என்ற கதை நன்றி மறவாத ஓநாயின் நற்குணத்தைச் சித்திரிக்கிறது. அடுத்தாற்போல் கூறிய 'கவிஞர் வாழ்க்கை' என்னும் 'தொடர்' பயனுள்ள அம்சம். இவ்வாரம் 'ரவீந்திரநாத் டாகு'ரின் வாழக்கை வரலாற்றைக் கூறினார் அண்ணா. கடைசியாக நடைபெற்ற 'எத்தன்' கதைப் பாட்டில், பாட்டு கேட்க இனிமையாக இருந்தது.

## சிறுவர் நிகழ்ச்சி (19-5-56)

ராஜாஜியின் கதை நீதியைக் கற்பிக்கிறது. அடுத்தாற்போல் சிறுவர், சிறுமிகள் பாடிய 'ஆனத்தத் தாண்டவம்' என்று ஆரம்பிக்கும் பாட்டு சுமாராகத்தானிருந்தது.

'அருள் ஜோதி வள்ளல்' என்ற நாடகம் கேட்கத் தெவிட்டாமலிருந்தது. ராமலிங்கராக நடித்த சிறுமி 'ரேடியோ'வுக்குப் புதிது போலும்! நடிப்பு சுமார். ஆனால் தங்கை பாடிய தோத்திரப் பாடல்கள் இனிமையாயிருந்தன.

—அ. நீ. சங்கரன், பெரியகுளம்.



இந்தக் கதையின் தலைப்பே உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது, அல்லவா? ஏதோ சீனா தேசத்துக் கதை போலிருக்கிறது; பெயரெல்லாம் வாயிலேயே நுழையாது என்று நினைக்கிறீர்கள், அல்லவா?

அப்படி யெல்லாம் நினைக்க வேண்டியதேயில்லை. அந்தமாதிரி எதையாவது எண்ணிக்கொண்டு கதையைப் படிக்காமல் கோட்டை விட்டு விடாதீர்கள். இது சீனக்காரர்களைப் பற்றிய கதையல்ல; சீனா தேசத்தில் நடந்த கதையும் அல்ல. இது நம் ஊரில் நடந்த கதை; இதில் வருகிறவர்களும் நம் ஊர்க்காரர்கள்தான். இதிலே நாய் ஒன்று வரப்போகிறது. அது கூட உதகையில் பிறந்து வளர்ந்த உயர்ந்த ஜாதி நாய்தான்.

ஆனால் சிலபேருடைய பெயர்கள் மட்டும் கொஞ்சம் வேடிக்கையாக இருக்கக் கூடும். உதாரணமாக, இதிலே ஷங்கங் என்று ஒருவன் வருகிறான். அவனுடைய உண்மையான பெயர் என்ன தெரியுமோ? சங்கரன். இது எப்படி சீனக்காரன் பெயர் மாதிரி ஆயிற்று என்பது உங்களுக்கே பின்னால் தெரியப் போகிறது.

அவன் பெயர் கிடக்கட்டும். இந்தக் கதையின் முக்கிய பாத்திரமான பையன் இருக்கிறானே, அவன் பெயரே சீனன் என்பது தான். சீனன் என்பது சீனிவாசன் என்ற பெயரின் சுருக்கம் என்பது நான் சொல்லியா உங்களுக்குத் தெரியவேண்டும்?

அவன் பெயர் சீனன் ஆயிற்றா? ஆளைப் பார்த்தாலும் கொஞ்சம் வேடிக்கையாகத்தான் இருப்பான். கொஞ்சம் மஞ்சளும் கறுப்பும் கலந்த மாநிறம். கொஞ்சம் சப்பை மூக்கு. கொஞ்சம் சின்னக் கண்கள். எல்லாம் கொஞ்சம் கொஞ்சம்தான். அதிகமில்லை. இத்தனைக்கும் அவன் சிறுபையனா, கொஞ்சம் பார்க்கக் குறிப்பாக, லட்சணமாக இருப்பான். ஆனால் அவனுடைய ஆடைகளை மட்டும் பார்த்துவிடக் கூடாது தொளதொளவென்று கிழிந்த தாத்தா சட்டையைப் போட்டுக்கொண்டு அரை டிராயர் ஒன்றையும் அறுதல் கிழிசலாக மாட்டிக்கொண்டு நிற்பான்.

எதற்குச் சொல்ல வந்தேன் என்றால் பெயரைக் கண்டு ஏமாற வேண்டாம் என்பதற்காகத்தான். ஆகவே கதையை இனிக் கவனிப்போம்.

சென்னையில் மிக முக்கியமான வீதிகளிலே மவுண்ட் ரோடு என்பதும் ஒன்று. அது சர்க்கார் மாளிகையிலிருந்து, செயின்ட் தாமஸ் மவுண்ட் என்ற இடம் வரையில் கிட்டதட்ட ஏழுமைல் தூரம் உள்ள பெரிய சாலை. அந்தச் சாலையின் ஆரம்பத்திலேயே சீனுக்காரன் ஹோட்டல் ஒன்று இருப்பதைப் பலர் பார்த்திருக்கலாம். அந்த ஹோட்டலின் பெயர்தான் சு-சூ! பெரிய எட்டுக்கால் பூச்சிகளைப் போன்ற எழுத்துக்களில் 'சுங்கிங் ரெஸ்டுரண்ட் - சு - சூ!' என்று மேலே எழுதியிருப்பார்கள். நம்மால் எல்லாம் சட்டென்று தெரிந்துகொள்ள முடியாது. அதன் மேல் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ளலாம்.



ஹோட்டல் என்றால் நமது ஊர் இட்டிலி, காபி ஹோட்டல் அல்ல. ஒருவர் போனால் ஒன்பது பேர் இடமில்லாமல் நின்றுகொண்டிருக்கிற ஹோட்டல் அல்ல. ஈக்களும் கொசுக்களும் சுகவாசஸ் தலங்களாக எண்ணி மொய்த்துக் கொண்டிருக்கும் ஹோட்டலும் அல்ல. வெண்கலக் கடையில் யானை புகுந்ததுபோல் கடா முடா என்று டமரா டம்ளர்களையும் தட்டுகளையும் உருட்டுகிற ஹோட்டலும் அல்ல.

அங்கே எப்போதும் அமைதியாக இருக்கும். எத்தனையோ பேர் அங்கே குடும்பத்தோடுகூடத் தங்கியிருப்பார்கள். ஆனால் வெளிப் பார்வைக்கு அங்கே யாரும் இருப்பதாகவே தெரியாது.

அந்த ஹோட்டலுக்கு வெளி வாசல் பக்கத்தில், சாலையை ஒட்டி, செய்தித்தாள் விற்கும் கடை ஒன்று இருக்கிறது. ''கலைமகள்-கண்ணன் மஞ்சரி, மித்திரன்-மெயில்'' என்று கை நிறைய ஒரு கட்டுச் சுமையை வைத்துக் கொண்டு கூவுகிற ஐந்தாறு சிறுவர்கள் அங்கே எப்போதும் கூவிக்கொண்டிருப்பார்கள். ஜன நெருக்கடியும் போக்குவரத்துச் சந்தடியுமான இடமாகையால் பத்திரிகைகளுக்கு அங்கே நல்ல விற்பனை. அந்தச் சிறுவர்கள் எல்லாரும் பார்வைக்குச் சோம்பேறிகள் மாதிரி இருந்தாலும் சாயங்கால வேளைகளில் மிகவும் சுறுசுறுப்பாகக் கூட்டங்களில் சுற்றிக்கொண்டிருப்பதைக் காணலாம். பக்கத்தில் உள்ள சினிமாத் தியேட்டர் வாசலிலும் பஸ் நிற்கும் இடங்களிலும் டாக்ஸிகள் நிறுத்தியுள்ள வரிசைகளிலும் அந்தச் சிறுவர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாகப் போய் நின்று, பத்திரிகைகளின் பெயரைச் சொல்லிக் கூவுவார்கள். அவர்களிலே வெகு சீக்கிரத்தில் எல்லாப் பத்திரிகைகளையும் விற்றுவிட்டு வருகிறானே, அவன் பெயர்தான் ஷங்கங். பக்கத்துச் சீனாக்கார ஹோட்டலின் சிப்பந்திகள் கூப்பிட்டுக் கூப்பிட்டுத்தான், சங்கரன் என்பது 'ஷங்கங்' ஆகிவிட்டது.



ஆனால் பஸ் ஸ்டாண்டுப் பக்கத்தில் நடைப்பாதையில் கடையைப் பரப்பிக்கொண்டு, போகிறவர்களையும் வருகிறவர்களையும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறானே, அவன்தான் நம்முடைய கதாநாயகன் சீனன். அவனிடம் மட்டும் பத்திரிகைகள் அப்படியே தங்கித்தான் கிடக்கும். லேசிலே எதுவும் விற்பனையே ஆகாது. ஏனென்றால் அவனுடைய முகராசி

அப்படி என்பதைத் தவிர வேறு என்ன சொல்வது?

அவனுடைய மற்றச் சகாக்கள் அவனைக் கிண்டலும் கேலியும் செய்வார்கள்; பார்த்துப் பார்த்துச் சிரிப்பார்கள். அவனைத் தனியே விட்டுவிட்டு, மூன்றுவது ஷோ ஸினிமாவுக்குக்கூடப் போவார்கள். ஆனல் அவனே ஒன்றையும் லட்சியம் செய்யாமல் உட்கார்ந்திருப்பான். ஒன்றையும் புரிந்துகொள்ளவும் மாட்டான். எதற்கும் கொஞ்சங்கூட முகத்தைச் சிணுக்கமாட்டான். கோபம் என்பதே துளியும் வராது. பேசாமல் கல்சிலேபோல் அசைந்து கொடுக்காமல் உட்கார்ந்திருப்பான்.

பத்திரிகைகள் என்றல் எப்படியோ விற்பனை ஆகாமலா இருக்கும்? தமிழ்ப் பத்திரிகைகள் எப்படியும் விற்றுவிடும். ஆங்கிலப் பத்திரிகைகள்தான் அவ்வளவு அங்கே விற்பனை ஆகாது. ஆனல் அவனுக்கு அதையெல்லாம் விற்பதற்கு நிச்சயமாக ஓர் இடம் இருந்தது. சு-சூ ஹோட்டலில் வந்து தங்கியிருப்பவர்கள் அத்தனை பேரும் அவனிடம்தான் வாங்குவார்கள். அவனைப்பார்த்தால் அவர்கள் தேசத்துப் பையன் மாதிரி கொஞ்சம் இருக்கிருன, அந்த அபிமானத்தில் வாங்குவார்கள்.




உனக்கு இல்லேன்னு அதுக் ... ஏண்டா என் ஐஸ் கிரீம் ...ட்டே வந்து பெருமூச்சு ...றே? என் ஐஸ் கிரீமெல் ...ம் உருகிப் போறது!

அன்று பத்து மணி இருக்கும். அன்று என்றல் அது ஒரு வெள்ளிக்கிழமை. அந்த நாளில்தான் சென்னையில் வாரப் பத்திரிகைகள் எல்லாம் கடைக்கு வருகிற வழக்கம். கடைப் பையன்களுக்கு அன்று சரியான சுமையாக இருக்கும். கத்தலோ கத்தல் என்று காது கிழிவதுபோல கத்தி விற்பனை செய்வார்கள். பணமும் அன்று பை நிறையப் புரளும். அதே போலத்தான் சீனன் பையிலும் நோட்டும் சில்லறையுமாகக் குவிந்து கிடந்தன. அவன் ஆங்கில தினசரித் தாள்களை ஹோட்டலில் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, கடையில் கணக்கு ஒப்பிக்க வந்தான். கடைக்காரன் அன்று வெகு கோபமாக இருந்தான். அவனுக்கு, சாதாரணமாகவே ரத்த விழிகள்! இன்றைக்கு அத்துடன் கோபம் வேறேயா, இரண்டும் நெருப்புப் பந்துகள் மாதிரி ஓடி ஓடி உருண்டன.

எதிரே ஷங்கங் கையைப் பிசைந்துகொண்டு நின்றிருந்தான்.

''பாக்கிக்கு மரியாதையாகப் பதில் சொல்லலே, தோலை உரிச்சுப்புடுவேன்'' என்றன் கடைக்காரன்.

''அதான் சொன்னேனே!'' என்று முனகினன் ஷங்கங்.

''என்னடா சொன்னே?''

''இதோ பாரேன், சொக்காயை! கீச்சல். துட்டு எங்கியோ ஊந்து பூட்டுது-ஒணும்னு நான் துட்டைத் தொலிச்சேன்?''

''டேய், மூடுரு வாயை; சொக்காய் கீச்சல்னு தெரியுமில்லே''—

''தெரியும்.''

''பின்னே ஏண்டா துட்டை அதுலே போட்டே?''

''தெரியாது.''

''என்னடா தெரியாது!''

''கீச்சல்னுதான் தெரியாதே;''

''முந்தி தெரியுமின்னியேடா!''

''நான் எப்ப சொன்னேன்?''

''இப்ப நீ சொல்லல்லே.. டோய், சீனு! இப்ப இவன் சொன்னுனு இல்லியாடா?''

''அதென்னமோ எனக்கு என்னு தெரியும்? க்குங்..''

''உனக்குத் தெரியாதா! இங்கே தானேடா நிக்கிறே?''

''எங்கே நிக்கிறேன்?''

''டேய் பசங்களா! எல்லாரும் ஒண்ணுச்சேந்துக்கிட்டு, குல்லாவாதைச்சுப் போடப் பாக்கிறீங்க? புடிச்சுப் போலீஸ்காரங்கிட்டே கொடுத்து, உதைக்கச் சொல்லனுமா?'' என்று கோபம் தாங்காமல் பாய்ந்தான் கடைக்காரன். ஆனல் ஷங்கங் சிட்டாகப் பறந்துவிட்டான்!

சீனன் மட்டும் ஓடாமல் நின்ருன். நின்றதோடு மட்டுமில்லே; ஷங்கங்கிடம் மெதுவாகக் கணக்குக் கேட்டு வாங்குவதாகவும் கடைக்காரனிடம் ஒப்புக்கொண்டான். அதற்குப் பிறகு, தன் கணக்கையும் காலணு மிச்சமின்றி சரியாகக் கட்டின பிறகுதான் கடைக்காரன் அவனை வெளியே போகவிட்டான்.

''ஒம்பது ரூபா விளுந்திட்டு துன்னு யாருடா நம்புவாங்க! சும்மா டுப் வுடருண்டா!'' என்ருன் கடைக்காரன்.

''வுளுந்து இருக்குங்க! கீச்சல் சொக்காயாச்சே!''

''அப்பன்னு பாக்கித் துட்டு மட்டும் எப்படிடா விளாமல் இருந்திச்சி! விளுந்தா எல்லாந்தானேடா போயிருக்கணும்?''

''ஆமாம்.''

''அப்ப பாக்கி இருக்குதுன்னு விளுந்தது பொய்தானே?''

''ஆமாம்.''

''அப்ப கணக்கு அதுபோலக் கொடுக்கணுமில்லே?''



டாக்டர்: ஏண்டா பையா, நிறைய மாம்பழம் தின்னையா? ரொம்ப இளைப்பா இருக்கியே!

பையன்: இல்லே டாக்டர், ஒண்ணுகூடக் கிடைக்கல்லே! இருந்தால் இரண்டு கொடுங்கோ, டாக்டர். தேறிடுவேன்.

---

''ஆமாம்.''

''அப்ப ஏன் கேட்டா ஓடறே?''

''நான் ஓடல்லியே!''

''நீ இல்லேடா. இவன் யாருடா இவன்? அந்தப் பயலேச் சொல்றேண்டா!''

''அவன்தான் இல்லியே!''

''இல்லாட்டி நீ போய்ச் சொல்லேன், சும்மா வுட்டுடமாட்டேன்னு. புடிச்சுப் போலிஸிலே கொடுத்திடுவேன்னு சொல்லேன்!''

''ஹ்ஹூம்..டே— அம்மாடீ.. நா மாட்டேங்க, கையைப் புடிச்சி ஒரு திருகு திருகினுன்னு —டே அம்மாடீ..உசிரு போயிடும்..''

''டேய், மூடுரு வாயை!'' என்று கடைக்காரன் கோபத்தோடு ஓர் அதட்டல் போட்ட பிறகு தான் சீனன் ஓய்ந்தான்.

கடையை விட்டு வழக்கம்போல பஸ் நிற்கும் இடத்திலுள்ள மேடையில் படுக்கப் போனுன் சீனன்.

ஷங்கங் வெகு நாளாகவே அந்தக் கடைக்காரனிடம் கரு வைத்திருந்தான். நிறையக் காசு குலுங்குகிற நாளாகப் பார்த்து அதை விட்டு ஓடிப்போய் விடப் போவதாக அவன் நாலைந்து நாளாகவே அடிக்கடி சொல்லி வந்தான். அதன்படி இன்று செய்து விட்டான் போலிருக்கிறது என்று சீனனுக்குத் தோன்றியது.

மறுநாள் சீனன் மட்டும் மற்றவர்களுடன் பத்திரிகை வாங்கிக் கூவி விற்றுவந்தான். ஆனுல் ஷங்கங் கண்ணிலேயே படவில்லை. அதற்கு மறுநாளும் வரவில்லை. ஷங்கங் வைதாலும், திட்டினுலும், பரிகாசமெல்லாம் செய்தாலும் அவன் மனசு சீனனுக்கு நன்ருகத் தெரியும், சீனன் என்ருல் அந்தப் பயலுக்கு உயிர்தான். இவனுக்கும் அப்படித்தான். இனி அவனைப் பார்க்கவே முடியாமல் போய்விடுமோ என்று எண்ணிய போது சீனனுக்கு என்னவோ போல் இருந்தது. தூக்கங்கூட வரவில்லை.

மணி பன்னிரண்டு இருக்கும். எல்லாக் கடைகளும் மூடியாகி விட்டன. மெதுவாகச் சீனன் காதருகில் வந்து யாரோ, ''டேய் சீனு - தூங்கிட்டியாடா?'' என்று கேட்டார்கள்.

சீனன் துள்ளியடித்துக்கொண்டு எழுந்து பார்த்தால், ஷங்கங்தான் நின்றுகொண் டிருந்தான். அவன் சாதாரண ஷங்கங்காகவா இருந்தான்? சொக்காய், டிராயர் எல்லாம் புதிது! அது மட்டுமா? கையிலே ஒரு தட்டு நிறைய பிளாஸ்டிக் சாமான்கள். 'எதை எடுத்தாலும், ஒன்ரீனு, இரண்டீனு' சாமான்கள்!

''ஏண்டா ஷங்கா! ஏதுடா இதெல்லாம்!''

''எல்லாம் என்னுதுடா-வாங்கினேண்டா!''

''எதுக்கு?''

''இனிமே இதாண்டா நம்ப வியாபாரம்?''

''பேப்பரு விக்கமாட்டியா?''

''அதுக்கு முந்தா நாளே முழுக்குப் போட்டாச்சே!''

''உன்னே புடிச்சு போலீஸிலே கொடுத்திடறேன் னிருக்காருடா கடைக்காரு.''

''அவரு கெடக்குருருடா! என்னைப் புடிச்சால்லே தெரியும். அவரையே புடிச்சி விட்டுடுவேன். சோடா, கலரு விக்கிறேன்னு, திருட்டு எசென்ஸ் விக்குருருடா, என்னை என்னு பண்ணுவாரு?''

''திருட்டு எசென்சுன்னு'''

''போடா-அது மயக்கம் வர விசயம்டா. நமக்குத் தெரியாதுடா!''

''ச்ரி..எனக்கும் இந்த மாதிரி ஏதாவது வாங்கிக் கொடுத்தா நானும் துணையா கூடவே வருவேனில்லே!''

'' ஆமாம்; அதுக்கு நீயும் ஒரு நாளு நான் செய்த வேலையைச் செய்!''

''சே சே..நம்பளுக்கு அதெல்லாம் முடியாதுடா!''

''அப்ப ஒண்ணு செய்! நாளைக்கு எங்கூட வா. என்ன? ஒரு இடத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போறேன். முதல்லே சும்மா கூலிக்கு விக்கலாம். அப்புறம் நீயே சொந்தமா விக்கக் கிளம்பிடலாம். சரிதானு?''

''சரிதான்.''

''அப்ப இங்கேயே நாளை எனக்காகக் காத்துக்கிட்டு இரு. நான் சாயங்காலம் சரியா அஞ்சு மணிக்கு வந்து அழைச்சுக்கிட்டுப் போறேன். வந்து பாரு..புடிச்சா இரு. இல்லாட்டி வந்திடலாம்'' என்ருன் ஷங்கங்.

''சரி'' என்று தலையாட்டினுன் சீனன்.

ஷங்கங் அதற்குப் பிறகு இருளிலே தட்டுடன் மறைந்து போனுன்.

(தொடரும்)

# என் புனைபெயர்கள்

**சந்திரன்**

"இவன்தான் ஸார், என் கடைக்குட்டி; மகாவாலு. முதல் நம்பர், விஷமக் கொடுக்கு! இவனைப் பற்றி என்னிடம் புகார் வராத நாளே கிடையாது என்றால் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள், இவன் போக்கிரித்தனத்தை!" என்று கோபம் கலந்த பெருமையுடன் என்னைப்பற்றிக் குட்டிப் பிரசங்கம் நடத்தினர் அப்பா.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த நண்பரும் தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை மாதிரி தலையை ஆட்டிக்கொண்டே என்னைப் பார்த்துத் தம் சொத்தைப் பல் தெரிய அசட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தார்.

அப்பா என்னைப் பற்றிக் கூறியதைக் கேட்டதும் எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அந்த நண்பரின் அசட்டுச் சிரிப்பு அதை மேலும் தூண்டிவிட்டது.

எதற்காகக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது என்று கேட்கிறீர்களா? என் அப்பாவின் பிரசங்கத்தை நீங்களும்தான் கேட்டீர்களே; அதில் ஒரு முறையாவது என் உண்மைப் பெயர் வெளிவந்ததோ? மேலும் அங்கே நிற்க எனக்கென்ன பைத்தியமா? ஆகவே வாசலுக்குக் கம்பி நீட்டினேன்.

"ஏய் கழுதை, எங்கேடா இவ்வளவு அவசரமா ஓடறே, குட்டிச் சுவரில் முட்டிக்கவா?" என்ற கம்பீரமான தாத்தாவின் குரல் என்னைத் தடுத்து நிறுத்தியது.

'கழுதை' என்று கூப்பிட்டதால் என் மனத்தில் எழுந்த கோபத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, "என்ன வேணும், தாத்தா?" என்றேன் பணிவாக.

"நாளைக்கு 'உன்னைப் பூஜை' பண்ணப் பூ வேணும். பறித்துப் போடு" என்றார் தாத்தா, எதிரி



விருந்த சண்பகப்பூ மரத்தைக் காட்டியவாறு.

எனக்குக் கோபம் தாளவில்லே.

'உன்னேயே பூஜை பண்றேன்னு உன் தாத்தா சொல்லும்போது உனக்குக் கோபம் வருவானேன்!' என்கிறீர்களா?

இதோ சொல்லுகிறேன், கேளுங்கள்: என் தாத்தா வாரந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஹநுமார் பூஜை பண்ணுவது வழக்கம்.

இப்பொழுது புரிகிறதா, தாத்தா மறைமுகமாக என்னே எப்படிக் குறிப்பிட்டார் என்பது?

ஒரே தாவில் மரத்தின் உச்சியை அடைந்தேன். எனக்கு வந்த ஆத்திரத்தில் பறித்த பூக்களேத் தரையில் போட்டேன்.

''ஏண்டா கிஷ்கிந்தாபுரி! நான் விரிப்பைக் காட்டிண்டு நிக்கறேன்; நீ என்னடான்னு, கிழே போடறியே!'' என்ருர் அதட்டுவது போல.

பிறகு கண்ணுக்குக் கண்ணுடி போட்டுக்கொண் டிருப்பதையும் மறந்து கிழே விழுந்த பூக்களே யெல்லாம் எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

அதற்குள் அங்கே வந்த என் தங்கை, ''டேய் தடியா! உன்னே உன் பிரண்டு ராஜாமணி வந்து கூப்பிடருன்'' என்ருள்.

அபரிமிதமான கோபம் வந்து விட்டது எனக்கு. அதைப் பொறுத்துக்கொண்டும் பார்த்தேன். முடியவில்லே. எனவே கிளேயிலிருந்து கிழே ஒரே எட்டில் குதித்து, 'தடியா' என்று கூப்பிட்ட அவள் முதுகில் கும்மென்று ஒரு குத்துக் குத்திவிட்டு, கேட்டை நோக்கிப் பாய்ந்தேன், ராஜாமணியைச் சந்திக்க.

கால் மணி நேரம் அவனுடன் வாத்தியார்களேப் பற்றியும் அவர்கள் கொடுக்கும் மார்க்குகளேப் பற்றியும் விவாதித்தேன்.

''நேரமாகி விட்டதடா பழி!'' என்று அவன் அவசரப்படுத்தவே, சாப்பிட்டுவிட்டு வருகிறேன் என்று அவனிடம் சொல்லிவிட்டு வீட்டினுள் நுழைந்தேன்.

''ஏய் குரங்கு! மந்திக் கடா! ஏண்டா இவளே அடிச்சே? கூறு கெட்டவனே!'' என்று கத்திக் கொண்டே அருகிலிருந்த வால் கரண்டியை ஓங்கினுள் என் பாட்டி.

எப்படியோ தப்பித்துக் கொண்டு சமையலறைக்குத் தாவினேன். ''டேய்; எருமை மாடு, என்ன டாது தாவல்? மொதல்லே சக்கரை வாங்கிண்டு வா; அப்புறம் சாப்பிடலாம்'' என்ருள் அம்மா.

''யாரையம்மா எருமை மாடுங்கறே?'' என்றேன் நான்.

''போடா, துடைப்பக்கட்டை! நான் செய்யச் சொன்னதைச் செய்துவிட்டு மறுவேலே பார்'' என்று அருகிலிருந்த செப்புத்தவலேயை ஓங்கவே, சில்லறையை எடுத்துக்கொண்டு மளிகைக் கடையை நோக்கி ஓடினேன். மளிகைக்கடைச் செட்டியார் ''அரட்டைக் கல்லிப் பொடியா? இந்தா ஒரு வெல்லக்கட்டி!'' என்று தாஜா செய்தார். சர்க்கரையை வாங்கிக்கொண்டு அம்மாவிடம் கொடுத்துவிட்டு ராஜாமணியுடன் பள்ளியை நோக்கிப் பறந்தேன்.

என்னேக் கண்டவுடன், ''வாலில்லா வானரம் வருதுடோய்!'' என்ற கோஷம் வானேப் பிளக்க எழுந்து பள்ளியை அதிர வைத்தது. நடுவில் எங்கள் வாத்தியார் வந்தார். ''மண்டுகங்களா! ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்?'' என்ருர். அப்படியாளுல் நானும் ஒரு மண்டுகம்தானே! இதெல்லாம் சரிதான் உன் உண்மைப் பெயர் என்னவென்று கேட்கிறீர்களா?

அதுதான் எனக்கே மறந்து போச்சே!

# தங்கச் சங்கிலி

## ராஜலக்ஷ்மி

பளபளவென்று நாலு விரல் சரிகைக் கரை போட்ட ரோஜா நிறப் பட்டுப்பாவாடை. கறுப்பு வர்ண ஸாட்டின் சில்க் சொக்காய்: அதன்மேல் புது மெருகுடன் தக தகவென்று மின்னும் அழகிய தங்கச் சங்கிலி. இந்த அலங்காரங்களுடன் தந்தப் பொம்மைபோல் நின்றுகொண்டிருந்தாள் பாமா. வைத்த விழி வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள், ஐந்து வயதுச் சிறுமியான மீனு. அவள் கண்களில் ததும்பிய ஆவலின் ஆழத்தைப் பாமா அறியாமலில்லை. அவள் மீனுவைவிட இரண்டு வயது மூத்தவள்.

மீனு ஒரு முறை தன்னைப் பார்த்துக்கொண்டாள். அழுக்கடைந்த ரப்பர் வளையல்கள். சிறிது கிழிந்திருக்கும் ஒரு மட்ட ரகச் சீட்டி கவுன். கழுத்தில் நூலில் கோக்கப்பட்ட சிவப்புக் கண்ணாடி மணி மாலை. அவளுக்கே வெட்கமாக இருந்தது. கூறப்போனால் பாமாவைவிட அவள் ஒரு படி அதிக அழகு என்றே கூறவேண்டும். அவளுக்கும் ஆசைகள் உண்டு. உணர்ச்சிகளுண்டு. ஏழையாகப் பிறந்துவிட்டது அவள் குற்றமா?

''பாமா! இது தங்கச் சங்கிலியா, அப்பா! எவ்வளவு நன்னாயிருக்கு!'' என்று ஆச்சரியத்துடன் பாமாவின் சங்கிலியைத் தனது தளிர்க் கரத்தால் தடவிப் பார்த்தாள் மீனு.

சிறுமி பாமா, அன்பு மேலிட்டவளாய் சங்கிலியைக் கழற்றி மீனுவின் கழுத்தில் போட்டுவிட்டாள். போட்டதுடன் நில்லாமல், சமையலறையில் வேலையாயிருந்த தன் தாயிடம் ஓடிப்போய் ''அம்மா, இந்தச் சங்கிலி மீனுவுக்கு ரொம்ப அழகாயிருக்கு, அம்மா, பாவம் அதை அவளே போட்டுக் கொள்ளட்டும். எனக்கு வேறே வாங்கித் தா. உன்னிடந்தான் நிறையப் பணம் இருக்கே'' என்று களங்கமற்ற உள்ளத்துடன் சொன்னாள். அவ்வளவுதான். இதைக் கேட்டதும் பாமாவின் தாயாரான பர்வதம் ஓர் எரிமலையே புரண்டு வருவது போல் கோபத்துடன் மீனுவின் கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றி எடுத்துக்கொண்டு அவள் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை விட்டு, ''சீ போ, மூதேவி. கண்ணைப் பார், கண்ணை. உன் சந்தத்துக்குத் தங்கச் சங்கிலி ஒன்றுதான் குறை. உன் அப்பன் செய்யும் குப்பைத் தொட்டி உத்தியோகத்துக்கு உனக்கு ஒரு வேளை சோறு கிடைத்தால் போதாதா? போ போ. சனியன், உன் கண் பட்டாலே அந்தச் சாமான் உருப்படாது''



என்று சொல்லி மீனுவை இழுத்து வந்து வெளியில் தள்ளி, படீ ரென்று கதவை மூடிக்கொண்டு போய்விட்டாள்.

மீனு வீட்டுக்கு வந்து அம்மா விடம் விம்மலுக்கிடையே திணறித் திணறி விஷயத்தைக் கூறினாள்.

இதைக் கேட்ட சுசீலாவின் தாயுள்ளம் கலங்கிற்று. "சுவா மியை வேண்டிக்கோ. நிறையப் பணம் கொடுப்பார். உனக்குக் கட்டாயம் தங்கச் சங்கிலி வாங்கித் தருகிறேன்" என்று குழந்தையைத் தேற்றினாள்.

மீனுவின் அப்பாவின் பெயர் ரகுநாதன். அவர் முனிஸிபாலிடி யில் குமாஸ்தாவாக இருந்தார். மீனு அவர்களுக்கு ஒரே பெண். அவளுக்கு முன்னால் மூன்று குழந்தைகள் பிறந்து மூன்றும் தவறிவிட்டன. மீனுதான் அவர் களுக்கு எல்லாம்.

பிரபல வக்கீலான ஆபத்சகாயம், வீடு கிடைக்காமல் பல நாட் களாகக் கஷ்டப்பட்ட ரகுநாத னுக்கு, தம் வீட்டின் ஒரு சிறு பகுதியை இருபத்தைந்து ரூபாய் வாடகைக்குக் கொடுத்து உத வினார். வக்கீலின் மனைவி பர்வதத் தம்மாள், அதாவது பாமாவின் அம்மா, தன்னாலான மட்டும் சுசீலாவை அதிகாரம் செய்து வந்தாள். 'தரித்திரங்கள். பஞ்சை கள், மூதேவிகள், அநாதைகள்' என்ற பலவித பட்டப் பெயர்களை வக்கீலம்மாள் தாராளமாக வழங் கினாள்.

பர்வதத்தம்மாள் அருந்தவம் செய்து தனது முப்பந்தைந்தாவது வயதில் பெற்ற பாமாவைச் செல்வமாக வளர்ப்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? நிமிஷத்துக்கு ஓர் ஆடை, நிமிஷத்துக்கு ஓர் ஆபரணம்!

பாமாவுக்கு மீனுவின் மேல் உயிர். அம்மா எவ்வளவு கோபித் துக் கொண்டாலும் அவளுடன் பழகாமல் அவளால் இருக்க முடியவில்லை.

சாயங்காலம் வந்ததும் வராததுமாக மீனு, "அம்மா, சங்கிலி வாங்கியாச்சா?" என்று ஆவலுடன் சுசீலாவைக் கேட்டாள். சுசீலா மீனுவை வாரியணைத்து, "கண்ணு, அப்பா ஆபீஸிலிருந்து வரும் போது கட்டாயம் சங்கிலி வாங்கி வருவார். நீ சமத்தாகத் தலை பின்னிக்கொண்டு சந்தோஷ மாக இரு" என்று சொன்னாள்.

மீனு அப்பாவின் வரவை எதிர்பார்த்து வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். அவன் வந்ததும் அவள் நெஞ்சு சந்தோ ஷத்தால் பொங்கியது. வந்ததுமே அவன் ஏதோ ஒன்றைச் சுசீலா விடம் கொடுப்பதைக் கண்டாள். ஆம், பள பளவென்று மின்னு கிறதே! அது சங்கிலிதான். அவளால் ஆவலை அடக்க முடியவில்லை. "அப்பா, சாமி எப்போ பணம் கொடுத்தார்? இது தங்கச் சங்கி லியா?" என்று கேட்டாள். ரகு நாதனும் சுசீலாவும் அர்த்த புஷ்டி யுடன ஒருவரை ஒருவர் பார்த் துக்கொண்டார்கள். அந்தப் பார்வையின் கருத்தை ஐந்து வயதுக் குழந்தையான மீனு எங்ஙனம் அறிந்து கொள்ளப் போகிறாள்?

சுசீலா அந்தச் சங்கிலியை மீனு கழுத்தில் போட்டாள். மீனு மகிழ்ச்சி பொங்க ஓடிப் போய், பாமாவிடம், "பாமா! இதோ பார். எனக்கும் எங்கப்பா ஒரு தங்கச் சங்கிலி வாங்கி வந்திருக் கார்" என்று பெருமையடித்துக் கொண்டாள்.

பாமா மீனுவின் கழுத்தில் பள பளவென்று மின்னும் புதுச் சங்கி லியை ஆச்சரியத்துடன் பார்த் தாள். இதற்குள் அங்கே வந்த பர்வதம் முகத்தைச் சுளித்து, "ஓகோ! தங்கச் சங்கிலியா! ஒரு நாள் தங்கம் போல் பளபள வென்றிருக்கும்! நாலு நாட்களா னால் பித்தளை பல்லை இளிக்கும். உங்கப்பன் உன்னை ஏமாற்றியிருக் கிறான்" என்றாள்.

"அம்மா! இது பித்தளைச் சங்கிலியாமே! என்னை ஏமாற்றி னியோ இல்லையோ! எனக்கு இது வேண்டாம்" என்று மீனு தன் தாயிடம் பிடிவாதம் செய்தாள்.

"கண்ணு! அழாதே; அடுத்த மாதம் நவராத்திரிக்குள் உனக்குக் கட்டாயம் நிஜமான தங்கச்சங்கிலி



வாங்கித் தருகிறேன்'' என்று தேற்றினன் ரகு. குழந்தை ஒரு வாறு சமாதானமடைந்தாள். அன்றிலிருந்து ரகுவும் சுசீலாவும் செலவைக் குறைத்து, சௌகரியங்களைக் குறைத்துக் கொண்டு வெகு சிரமப்பட்டு மாதந்தோறும் பதினைந்து ரூபாய் ஒதுக்கி வைத்தார்கள்.

அன்று ஆடி வெள்ளிக்கிழமை. காரியாலயத்திலிருந்து வீடு திரும்பிய ரகு சுசீலாவின் கலவரமடைந்த முகத்தைக் கண்டு திடுக்கிட்டான். கழுத்து முதல், கால்வரையில் கம்பளிப் போர்வையால் மூடப்பட்டு ஸ்மரணையின்றிக் கட்டிலில் துவண்டு கிடக்கும் மீனவைக் கண்ட ரகுவின் நெஞ்சம் கலங்கியது. ''குழந்தைக்கு என்ன உடம்பு? காலையில்கூட நன்றாக இருந்தாளே'' என்று படபடப்புடன் கேட்டான்.

''பள்ளிக்கூடத்தில் இரண்டு முறை வாந்தி எடுத்தாள் என்று சொல்லி ஆயா பன்னிரண்டு மணிக்கு அவளை அழைத்து வந்தாள். அது முதல் கடுமையான காய்ச்சலடிக்கிறது'' என்று சுசீலா கவலையுடன் கூறினள்.

ரகு உடனே டாக்டரை அழைத்து வந்தான். அவர் பரிசோதித்துவிட்டு, குழந்தைக்குக் கடுமையான கபவாத ஜுரம் என்றும் உடனே பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் சொல்லிவிட்டார்.

வைத்தியசாலையில் குழந்தை ஜன்னி கண்டதுபோல் பிதற்றத் தொடங்கினள். இடையிடையே அவள் 'தங்கச் சங்கிலி, தங்கச் சங்கிலி' என்று அரற்றும்போது, சுசீலாவின் தாயுள்ளம் துடித்தது.

பித்துப் பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். ரகு சுசீலாவைத் தேற்றினான். உயர்ந்த மருந்துகளை வாங்கிக் கொடுத்தான்.

சில நாட்களில் மீனா டாக்டரின் பெரு முயற்சியால் பிழைத்தெழுந்தாள். சங்கிலிக்காகச் சேமித்த பணத்தை டாக்டரிடம் கொட்டிக் கொடுத்துவிட்டு மீனாவை வீட்டுக்கு அழைத்துவந்தான் ரகு. மீனா துரும்புபோல மெலிந்து உருமாறி விட்டாள். அவளுக்குப் பேசக் கூடச் சக்தியில்லாமல் போய்விட்டது.

குழந்தை மீனாவை வீட்டுக்கு அழைத்து வந்த எட்டாவது நாள் நவராத்திரி வந்தது. சுசீலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. தன் கையிலிருந்த ஒரு ஜோடி வளையல்களை அழித்து குழந்தைக்குச் சங்கிலி பண்ணுவது என்று முடிவு செய்து ரகுவிடம் கூறினாள். அருமை மனைவியின் ஒரே நகையை அழிக்க அவனுக்கோ மனமில்லை. என்ன செய்வது? குழந்தையை உத்தேசித்து அவள் விருப்பத்திற்கு இசைந்தான்.

சுசீலா வீட்டை மெழுகிக் கோலமிட்டுத் தன் சக்திக்குத் தகுந்தவாறு ஒரு சிறு விருந்தைத் தயாரித்தாள். மீனா வாசற்பக்கத்து அறையில் அமர்ந்து ஜன்னல் வழியாகத் தெருவை வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தாள்.

வாசல் பக்கத்திலிருந்து வந்த கூக்குரல் மீனாவின் கவனத்தை இழுத்துச் சென்றது. பர்வதம்மாள் குய்யோ முறையோ என்று கத்திக்கொண் டிருந்தாள். வாசலில் ஒரு போலீஸ்காரன் கையைக் காட்டி ஏதோ சொல்லிக்கொண் டிருந்தான். கூட்டமாகப் பலர் கூடி, கசமுசவென்று பேசிக் கொண்டிருந்தார்கள். மீனாவுக்கு ஒன்றும் புரியவில்லை. புத்தம் புது உடையணிந்துகொண்டு தேம்பித் தேம்பி அழுதுகொண் டிருந்த பாமாவைக் கண்டதும் மீனாவுக்குத் துக்கம் பொத்துக்கொண்டு வந்தது.

மும்முரமாகச் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த சுசீலாவைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வாசலுக்கு ஓடினாள் மீனா. விஷயம் விளங்க அதிக நேரமாகவில்லை. புதுச் சங்கிலியைப் போட்டுக்கொண்டு தெருக்கோடியில் குரங்காட்டியை வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்திருக்கிறாள் பாமா. அந்தக் கூட்டத்தில் ஒரு திருடன் பாமாவை மிட்டாய் தருவதாக ஏமாற்றி ஒரு சந்து முனையில் அழைத்துப் போய், சங்கிலியைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டானாம். பாமா வழி தவறி அழுதுகொண்டே எங்கேயோ போய்விட்டாள்.

வெகு நேரமாகப் பாமாவைக் காணாத பெற்றோர் பல இடங்களில் தேடியும் அகப்படாததால் போலீசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். தெருவில் அழுதுகொண் டிருந்த குழந்தையை ஒரு மனிதன் போலீஸில் ஒப்படைத்திருக்கிறான். விஷயமறிந்த போலீஸ்காரன் குழந்தையுடன் வந்திருக்கிறான்.

குழந்தை வரும்வரையில் குழந்தையை உயிருடன் பார்த்தால் போதும் என்று கதறிக்கொண் டிருந்த பர்வதம்மாள், குழந்தை வந்ததும் சங்கிலி போனதற்காக ஒப்பாரி வைக்கலானாள். போலீஸ்காரன் ஏளனமாக, "அம்மா விளையாடற கொளந்தைங்களுக்குத் தங்க நகை போடக்கூடாதம்மா. காலம் கெட்டுக் கடக்குது. பெரியவங்களையே கொண்ணுப்போட்டுடறாங்க. பித்தளை நகைகூடப் போடக்கூடாதுங்க. அதைக்கூடத் தங்கமின்னு நெனச்சு, அதுக்காகக் குழந்தையைச் சிலசமயம் கொன்னுப் போட்டுடுவாங்க. நகை போனா வரும்! கொளந்தே போனா வருமா?" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டுப் போனான்.

அந்தப் போலீஸ்காரன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் மீனாவின் குழந்தையுள்ளத்தில் பசுமரத்து ஆணிபோல் பதிந்துவிட்டது. பர்வதம்மாளின் கோபமெல்லாம் திண்ணையில் சாய்ந்துகொண்டு நின்றிருந்த மீனாவின்பேரில் பாய்ந்தது. "கண்ணைப் பார் கண்ணை! எனக்கு அப்போதே தெரியும். ஆந்தையாட்டமா விழிக்கிறதைப் பார்;

இந்தப் பாழும் கண் பட்டுத்தான் என் குழந்தையின் சங்கிலி போச்சு!'' என்று படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டு, பாமாவை இழுத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

பர்வதத்தின் வார்த்தைகள் சுசீலாவின் இதயத்தில் ஈட்டிபோல் பாய்ந்தன. 'அவள் பணம்படைத்தவள். என்ன வேண்டுமானாலும் பேசலாம்' என்று மனம் வருந்தினாள்.

சாயங்காலம் ரகு ஆபீஸிலிருந்து வரும்போது சந்தோஷமாகக் காணப்பட்டான். அவன் கையில் ஒரு தோல் பெட்டியைக் கொண்டு வந்தான். ''சுசீலா! இந்தப் பெட்டியைத் திறந்து இதில் என்ன இருக்கிறது என்று பார்'' என்று சொல்லிவிட்டுக் கோட்டைக் கழற்றினான்.

சுசீலா பெட்டியைத் திறந்தாள். என்ன ஆச்சரியம்! அதில் அழகிய வர்ணமுள்ள பலவிதப் பொம்மைகளும் விளையாட்டுச் சாமான்களும் இருந்தன. சுசீலா அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே வைத்தாள். மீனா வைத்த விழி வாங்காமல் அவைகளைப் பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றாள்.

ரகு சிரித்தபடி தன் சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு சிறு காகிதப் பொட்டலத்தை எடுத்துச் சுசீலாவிடம் கொடுத்தான். பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்த சுசீலாவின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

புத்தம் புதுத் தங்கச் சங்கிலி!

''இதெல்லாம் வாங்கப் பணம் ஏது?''

''சுசி, நான் செய்யாத குற்றத்துக்காக என்னை மூன்று மாதச் சம்பளத்துடன் வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள். அதில் ஐம்பது ரூபாய்க்கு மீனாவுக்குத் துணியும் பொம்மைகளும் வாங்கினேன். மீதியுள்ள பணத்திற்கு மூன்று பவுனில் கூலி உள்பட ஒரு தங்கச் சங்கிலி வாங்கினேன். உன் வளையல்களை அழிக்கவில்லை'' என்றான்.

சுசீலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் கணவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று அவன் முகத்தை உற்று நோக்கினாள். வேலை போனதைக் குறித்து வருத்தமும் படாமல் பணத்தையும் செலவழித்துவிட்டுச் சிரிக்கும் மனிதனைப் பைத்தியம் என்று நினைக்காமல் வேறு என்ன நினைப்பது?

ரகு மனைவியின் கருத்தையறிந்தான். ''சுசீலா, பயப்படாதே! வேலையை நானே ராஜிநாமா செய்வதாக இருந்தேன், இதோ பார். பம்பாயில் டாடா கம்பெனியில் என்னை இருநூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்துக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முதல் தேதி வேலையை ஒப்புக்கொண்டாக வேண்டும்.''

சுசீலா எல்லையற்ற சந்தோஷத்துடன் தங்கச் சங்கிலியை மீனாவிடம் காண்பித்தாள். அவள் முகத்தில் ஒருவித மாறுதலும் தென்படவில்லை. பொம்மைகளையே திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த அவள் கண்கள் சங்கிலியை நோக்க மறுத்தன.

''மீனா, இதோ பார். நீ ஆசைப்பட்ட நிஜமான தங்கச் சங்கிலி. போட்டுக்கொள், கண்ணே'' என்று சுசீலா மீனாவின் முகத்தைத் தூக்கினாள்.

மீனா தலை நிமிர்ந்தாள். என்ன ஆச்சரியம்! தங்கச் சங்கிலியைக் கண்டதும் அவள் கண்களில் ஆவல் ததும்பவில்லை. ஆசை பொங்கவில்லை. அதற்குப் பதில் வெறுப்புக் குறியே தோன்றியது.

''அம்மா எனக்கு இந்தச் சங்கிலி வேண்டவே வேண்டாம். நான் அதைப் பார்க்கவேமாட்டேன். அதுவும் என் கண் பொல்லாத கண். அதை நான் போட்டுண்டால் யாராவது என்னைத் தூக்கிண்டு போயிடுவான். அப்போ நீ அடுத்த வீட்டு அம்மாள்மாதிரி அழுவே. எனக்கு அம்மாவும் அப்பாவும் சிரித்துக்கொண் டிருந்தால்தான் பிடிக்கும். கடையிலே இதை வாங்கப் பணம் குடுத்தாரே, அந்தச் சாமி படத்துக்கே போட்டுடு. எனக்கு வாண்டவே வாண்டாம்.''

ரகு மீனாவை வாரியணைத்து முத்தமிட்டான்.




## கட்டபொம்மன் கும்மி

பாண்டிய நாடென்று சொல்லும்போது—வீர
பாண்டியனை உள்ளம் எண்ணுதம்மா
ஆண்ட அவன்புகழ் கேட்டிடிலோ—மிக்க
ஆர்வமும் இன்பமும் பொங்குதம்மா. 1

பாஞ்சாலங் குறிச்சிச் சீமையிலே—வீரன்
பார்புகழ் வேந்தனாய் ஆண்டானம்மா.
பூஞ்சோலை ஆகவே ஆக்கி வைத்தான்—அது
பொன்விளை பூமியாய்க் கண்டதம்மா. 2

வஞ்சக ஆங்கிலர் சூழ்ச்சியெலாம்—வீர
வாளினைக் கொண்டே அழித்தானம்மா.
நெஞ்சம் நிறைகொண்ட நாட்டுப் பற்றால்—அவன்
நீதிக்குப் போராடி வீழ்ந்தானம்மா. 3

கலெக்டர் லூஷிங்டன் கட்டளைக்குப்—பேட்டி
காண மறுத்திட்ட தீரனம்மா.
விலக்க முடியாத துன்பமெலாம்—அந்த
வீரனை யேசார்ந்து நின்றதம்மா. 4

பெற்ற திருநாட்டை மீட்பதற்கே—வீரம்
பேசி நின்றதமிழ்ப் பாண்டியனின்
உற்ற துரோகியாம் தொண்டைமானால்—அவன்
ஊனுடல் நீங்கியே போனதம்மா. 5

உத்தமனாம் கட்ட பொம்மனம்மா—அவன்
ஒண்புகழைக்கூறி வாழ்த்திடுவோம்
புத்தம் புதிதான பொம்மன்களை—ஈந்து
பொன்னொளிர் நாட்டினைக் காத்திடுவோம். 6

—ஆக்கூர் சுந்தரேசன்.

# அன்புள்ளம்

## எஸ். விசுவநாதன்

### 1

"அப்பு..அப்பூ..ஊ.!''

''ஓவ், இதோ வந்துட்டேன்.''

ஒரு நிமிஷம் ஓடியது. மறுபடியும் அப்பாவின் 'ஆபீஸ்' அறையிலிருந்து குரல் கேட்டது.

'அடேய் அப்பூ..!''

''இதோ வந்தாச்சு, ஸார்!''

''எத்தனை தடவைடா கூப்பிடறது? இதோ, இவா ரெண்டு பேருக்கும் காபியும் பலகாரமும் கொண்டுவந்து கொடு.''

''காபி மாத்திரம் போருமா? ஓவலும் வேணுமா?

''காபி மாத்திரம்தான்.''

''சரி...... வந்துட்டேன்!''

அப்பு அடுக்களைக்குப் பறந்தான். ஐந்து நிமிஷங்களில் ஆவி பறக்கும் காபியுடனும், பலகாரத் தட்டுகளுடனும் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தான்.

அங்கே இருந்தவர்கள் பேசிக்கொண்டேயிருந்தனர்.

''யார் சார், இவன்? சமையல்காரப் பையனா?''

''எங்க மலையாளப் பக்கத்துப் பையன்; அம்மா, அப்பா அஞ்சு வயசிலேயே போயிட்டா. பையனை நான் கூட்டிண்டு வந்து, வீட்டோட வச்சுண்டுட்டேன். சமையலுக்கு இவன்தான்! இள வயசு. பையன் ரொம்பச் சுறுசுறுப்பு; சொன்ன வேலையைச் சொன்ன மாதிரி செய்வான்!'' அப்பா அப்புவை விமர்சித்தார்,

### 2

"அப்பு..அப்பூ..ஊ.!''

என் தொண்டையிலிருந்து எழுந்த மேற்படி ஒலி அடுக்களையிலிருந்த அப்புவின் செவிகளில் பாய்ந்திருக்க வேண்டும்.

''என்ன விச்சு, ஸார்?'' என்று பதில் வந்தது.

அப்புவுக்கும் என் வயதேதான். என்றாலும், வேண்டுமென்றே அவன் 'ஸார்' போட்டுத்தான் பேசுவான்.

''இங்கே சித்த வாயேன்!''

அப்பு வந்தான்.

''நாளைக்கி என்னோட கிளாஸ்



பசங்கள் நாலு பேர் வரா. ரெண்டு ஸ்வீட, ரெண்டு காரம், காபியோட ஒரு 'பார்ட்டி' கொடுக்கணும். செய்வாயோடா?''

''ஐயையோ! உங்க அப்பாவுக்குத் தெரிஞ்சால் சாடு சாடுன்னு சாடுவார்! வேண்டாண்டா அப்பா, வேண்டாம்; இந்த வம்பே வேண்டாம்!''

''நான் சொல்றேன்; நீ கேக்க மாட்டே?''

அப்பு சிறிது நேரம் அசைவற்று மௌனமாக நின்றான்.

''எங்கிட்டச் சொல்லாதே, விச்சு ஸார்! அப்புறம் உங்க அப்பாவோட கோவத்துக்கு நான் ஆளாக முடியாது!''

''அப்பா நாளைக்கி ஊருக்குப் போறு; வர ரெண்டு மூணு நாள் ஆகும். நீ ஒண்ணும் பயப்பட வேண்டாம்.''

''வந்துட்டு விஷயம் தெரிஞ்சுதுன்னு, இந்த அகத்திலே நான் இருக்க முடியாது. விச்சு ஸார்! அதை யோசிச்சுப் பாரு!''

''விஷயம் அவருக்கு எப்படிடா தெரியப்போறது? அப்படித் தெரிஞ்சாலும் அதுக்கு நான் பதில் சொல்லிக்கிறேன்.''

''விச்சு ஸார்..!''

''என்னடா? விச்சு ஸாராம் விச்சு ஸார்! சொல்ற வேலையைச் செய்யறது கிடையாது. விச்சுவாம், ஸாராம்! நீ ஒண்ணும் செய்ய வேண்டாம்: போ, உன் அடுக்களை சாம்ராஜ்யத்துக்கு! நான் ஓட்டல்லே அவாளுக்குப் 'பார்ட்டி' கொடுத்துக்கறேன்!''

என் குரல் உச்சஸ்தாயியில் பயங்கரமாக ஒலித்தது. நான் கண்களை உருட்டி விழித்ததை எதிர்க் கண்ணாடி பிரதிபலித்தது.

அப்பு மௌனமாகத் தலை குனிந்து நின்றான். அவன் விழிகளில் நீர் சுரந்து ஒரு துளி தரையில் உருண்டு சிறு வட்டமாகப் பரவி நின்றது.

அடுத்த நிமிஷம்—

அப்பு மாடிப் படிகளில் இறங்கிப் போவதைப் பார்த்தேன். அவன் நின்ற இடத்தில் விழுந்து பரந்த கண்ணீர்த் துளி என் விழிகளை உறுத்தியது.

## 3

''அப்பு..அப்பூ..ஊ..!''

அம்மாவின் குரல் வீடு முழுவதும் எதிரொலித்தது.

பதில் கிடைக்காமல் போகவே மறுபடி அம்மாவின் தொண்டையிலிருந்து குரல் பீரிட்டது.

''அடேய் அப்பூ..;''

பதிலே இல்லை! அம்மா மாடியேறி என் அறைக்கு வந்தாள்.

''அப்பு எங்கேடா விச்சு? ஆளையே காணல்லே!'?

''என்ன..?''

''அப்புவைக் காணேங்கறேன்; என்னங்கறியே!''

''சாயந்தரம்கூட என்னோட பேசிண்டிருந்தானே! அதுக்குள்ள எங்கே போயிருப்பான்? ஒரு சமயம் சினிமா எதுக்காவது..?''

''ஆமாம், சினிமா! ஒன்னெப் போல் சினிமாப் பைத்தியம் இல்லே அவன்!''—அம்மாவின் பதிலில் சாட்டை யிருந்தது.

''அப்படீன்னு எனக்குத் தெரியாது!''

''ஒனக்கும் தெரியாது, எனக்கும் தெரியாதுன்னு எங்கே போயிருப்பாண்டா அவன்? ராத்திரி மணி ஒன்பது அடிக்கப் போறது. சாப்டுட்டுப் படுத்துக்க வேண்டாமா?''

அம்மா கீழே இறங்கிவிட்டாள். அப்பாவுக்குச் செய்தி 'ஒலி பரப்பு'ப் பட்டதை அரை நொடியில் உணர்ந்தேன். ஏனென்றால் அப்பாவும் 'எங்கே, எங்கே' என்று தேடிய வண்ணமாகவே இருந்தார். டிரைவர் காரை எடுத்துக்கொண்டு சுற்றினான். தோட்டக்கார வீராசாமி சைக்கிளில் அலைந்தான்.

எனக்குத் தெரியும்—அப்புவை நான் கூறிய பதில்தான் வீட்டை விட்டு ஓட்டியிருக்க வேண்டும் என்று. எனக்கே மிக வருத்தமாக இருந்தது. எப்போதும் தவறு செய்துவிட்டுத்தான் யோசனையும், வருத்தமும்!

அப்பு இல்லையென்றால் வீடு எப்படியிருக்கும் என்று சொல்




லவே வேண்டாம். அம்மாவால் அடுக்களைக் காரியங்கள் அவ்வளவும் ஆகாது. தவிர அப்பு இருந்தால் சிறிது கலகலப்பாக இருக்கும். இப்பொழுது அது அவன் கூடவே போய்விட்டதே! நான் அப்புவிடம் கோபித்துக்கொண்ட விஷயம் அப்பாவுக்குத் தெரிந்தால், 'உன்னால்தானேடா அவன் வீட்டை விட்டுப் போனான்!' என்று சண்டை பிடிப்பார். கோபம் அந்தச் சமயத்தில் 'ஓவர் லோடா'க இருந்தால் என் முதுகும் வீங்கிவிடும், எங்கள் மலையாளப் பப்படம் கணக்காக. அதனால் நான் அப்பாவிடம் எனக்கும் அப்புவுக்கும் நடந்த சம்பாஷணையைத் தெரிவிக்கவேயில்லை. ஆனால் என் மனத்தில் மட்டும், 'அப்பு உன்னால்தான் ஓடிப்போனான்; உன்னால்தான் ஓடிப்போனான்!' என ஏதோ ஒன்று இரைவதை நான் உணர்ந்தேன். அன்று இரவு நான் தூங்காததன் குறை-மறுநாள் கண்கள் ரத்தச் சிவப்பேறிக் கனத்தன. மனமும் கனத்தது—குற்றம் என்ற சுமை இருக்கிறதே!

அப்பா அன்று இரவுதான் பட்டணத்துக்குப் போனார், கேஸ் விஷயமாக. வர இரண்டு நாட்கள் பிடித்தன. மூன்றாம் நாள் காலை அப்பா வரும்போது..?

## 4

"அப்பு..அப்பூ..ஊ..!"

வியப்புக் கலந்த குரல் ஒன்று, வாசலிலிருந்த தோட்டக்கார வீராசாமியின் கண்டத்திலிருந்து எழுந்து, 'அப்புவா? அப்புவா வந்திருக்கிறான் எசமானுடன்?' என்ற அர்த்தத்தை வெளிப்படுத்தின.

கட்டிலிலிருந்து எழுந்து கம்பளிப் போர்வையை விலக்கி வீசியெறிந்து, 'திடு திடு' வென்று மாடிப் படிகளில் இறங்கிக் கீழே ஓடினேன். அப்பாவுடன் அப்புவும் வந்தான். டிரைவர் சாமான்களை உள்ளே எடுத்து வைத்தான். அப்புவின் தலை குனிந்தவாக்கிலேயே இருந்தது. அம்மாவும் உள்ளிருந்து வந்தாள்.

''இதென்ன இது! இவன் எப்படி ஒங்களோட வந்தான்! ஆச்சரியமா இருக்கே!''

எங்கே அப்பு விஷயத்தைச் சொல்லிவிட்டானோ என்று பயந்தேன். அப்பாவின் பதிலைக் கேட்க

என் செவிகள் வெகு கூர்மையாக நின்றன.

''இங்கேயிருந்து பட்டணம் போனதும், பல் விளக்கிண்டு காரை ஓட்டலுக்கு ஓட்டினேன். காபி எடுத்துண்டு வர்ற ஆளைப் பார்த்ததும் ஆச்சரியமாப் போயிடுத்து. அவனும் என்னைப் பார்த்துட்டான். உடனே இன்னொரு 'ஸெர்வர்' கிட்டே கொடுத்து அதை என்னிடம் அனுப்பப் பார்த்தான். 'அப்பூ'ன்னேன். அப்படியே நின்னுட்டான். 'ஏண்டா சொல்லாமெ வந்தே?' இன்னு கேட்டேன். நம்ப பரமேச்வரா லஞ்ச்ஹோம் சங்கரன் தான் பட்டணத்துப் புது ஹோட்டல்லே நெறயக் காசு கெடைக்கும்னு கூட்டிண்டு வந்துட்டதாகவும், மன்னிச்சுடணும்னும் சொன்னான். கூட்டிண்டு வந்துட்டேன், 'புரொப்பரைட்டர்' கிட்டே சொல்லிட்டு!'' என்று நிறுத்தினார் அப்பா.

என்னிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

அப்புவின் மனம் எண்ணத்திற்கு அப்பாற்பட்ட ஓர் அன்புள்ளம் என்ற அநுபவ உண்மையும் அதனுடன் எழுந்தது.

நான் அப்புவை நோக்கினேன் பரிவுடன்.

புன்னகையுடன் பழையபடி, ''என்ன விச்சு ஸார்!'' என்று அப்பு கூப்பிட்டது என் செவியில் இன்பத் தேன் பாய்ச்சியதுபோல் இருந்தது.

என் மனம் என்னுள் அப்புவை நோக்கிக் கூவியது:

''நீ என்னை மன்னித்துவிடு; மன்னித்தேன் என்று சொல் அப்பு! அப்பூ..ஊ..! நீ மட்டும் உண்மையைச் சொல்லியிருந்தால் எனக்குத் 'தப்பல்' விழுந்திருக்குமே!''

---

## எண்ணிலே படங்கள்

'மூட்டை'



1 முதல் 9 வரையில்

# பொய் சொல்லாதே!

ரா. லக்ஷ்மி

நான் ஏதோ உபதேசம் செய்ய வருகிறேன் என்று எண்ணுகிறீர்கள். மேல் நாடுகளில் பொய் சொல்லுவதே ஒரு கலையாகப் போய்விட்டதாம். யார் எல்லோரையும் விட அற்புதமாகப் பொய் சொல்லுகிறார்கள் என்று போட்டி வைத்துப் பரிசுகூடக் கொடுக்கிறார்களாம். இந்தச் சமயத்தில் நான், 'பொய் சொல்லாதே' என்று உபதேசம் செய்ய வந்தால் பேசாமல் பக்கத்தை மூடிவிட்டுப் போவீர்கள் என்று எனக்குத் தெரியாதா?

'பொய் சொல்லாதே' என்பது, புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஓர் இயந்திரத்திற்கு நான் சூட்டியிருக்கும் பெயர்! இந்த இயந்திரத்திற்கு விஞ்ஞானிகள் சூட்டிய பெயர் போலிகிராப் (Polygraph). 'பொய் கண்டுபிடிக்கும் கருவி' (Lie Director) என்றும் இதைக் கூறுகிறார்கள்.

இந்த இயந்திரத்திற்குக் கால் கிடையாது. கை உண்டு. ஒன்றல்ல, இரண்டல்ல; ஐந்து கைகள்! ஒருவன் பொய் சொல்லுகிறானா, உண்மை சொல்லுகிறானா என்பதை இது சொல்லிவிடும். எப்படித் தெரியுமா? தன் ஐந்து கைகளிலும் ஐந்து பேனாக்களைப் பிடித்துக் கொண்டு எழுதிக் காட்டிவிடும்!

போலிகிராப் பார்ப்பதற்கு ஒரு சிறிய ரேடியோச் செய்தி பரப்பி (Radio Transmitter) யைப் போலிருக்கும். இப்பொழுது நான் சொல்லுவது பொய்யா, உண்மையா என்று கண்டுபிடிக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். என்னை ஒரு நாற்காலியில் அமரச் செய்து என் கையை அதன் கைச் சட்டத்தில் வைத்துக்கொள்ளச் சொல்லுவார்கள். என் ஒரு கையில் தோள் பட்டைக்குக் கீழே ஒரு பட்டையைச் சுற்றிக் கட்டுவார்கள். இது நான் பேசும்போது என் நாடியையும் ரத்த அழுத்தத்தையும் தெரிவிக்கும். மற்றொரு பட்டையைச் சுவாசத்தின் முரண்பாடுகளை அறிவதற்காக வேண்டி மார்பைச் சுற்றிக் கட்டுவார்கள். என் வலது கை உள்ளங்கையில் டெலிபோன் ஒலிவாங்கியைப் போன்ற ஒரு சிறிய கருவியை வைப்பார்கள். இது என் கையில், உணர்ச்சியினால் திடீரென்று ஏற்படக் கூடிய வியர்வையைத் தெரிவிப்பதற்காக. இந்தப் பட்டைகளும் கருவியும் போலிகிராபருடன் இணைக்கப்பட்டிருக்கும். நான் கால் வைத்திருக்கும் பலகையிலிருந்தும், கை வைத்திருக்கும் நாற்காலி கைச் சட்டத்திலிருந்தும் இரண்டு (wire) கம்பிகள் போலிகிராபருடன் சென்று இணையும். சில சமயங்களில் உணர்ச்சியினால் நம்மை அறியாமலே கைகால்களிலுள்ள தசைகளில் இறுக்கம் ஏற்படுகிறது அல்லவா? அதை இந்தக் கம்பிகள் காட்டிவிடும்.

இந்த ஏற்பாடுகளையெல்லாம் பார்த்தவுடனேயே நான் பயந்து போய் உண்மை சொல்லவேண்டிய இடத்தில்கூடப் பொய் சொல்ல ஆரம்பித்து விடுவேன்! ஆனால் சும்மா நம்மை பயமுறுத்த வேண்டும் என்று இதெல்லாம் செய்யவில்லை. இந்த இயந்திரத்தில் 'சூ மந்திரக்காளி' வித்தை ஒன்றுமே கிடையாது.

நாம் பொய் சொல்லும்போது நம் மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பதால், ஒருவித உணர்ச்சியினால் ரத்த ஓட்டத்திலும், சுவாசத்திலும் சிறிய மாறுதல்கள் ஏற்படும். கையில் வியர்வை உண்டாகும். தசைகளில் அழுத்தம் ஏற்படும். இவைகளையெல்லாம் 'பொய் சொல்லாதே' கண்டுபித்து விடுவதால் நாம் பொய்

சொல்லுகிறோம் என்பது தெரிந்து விடுகிறது. கடைசியில் நம்மைக் காட்டிக்கொடுப்பது நம் மனச் சாட்சிதான்!

பொய் கண்டு பிடிக்கும் இந்தக் கருவி எப்படி நமக்கு உபயோகப் படுகிறது என்று பார்ப்போம்.

முன்பெல்லாம் நியாய ஸ்தலங்களில் சாட்சிகள் தங்களுக்குத் தெரிந்த உண்மையைச் சொன்னார்கள். சத்திய அசத்தியத்தைப் பார்த்து நியாயம் வழங்கப்பட்டது.

இப்பொழுதெல்லாம் பெரும்பாலும் இப்படி இல்லை. 'சாட்சி ஜோடனை' என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். வக்கீல் தம் கட்சிக்காரருக்குத் தகுந்தவாறு கதை ஜோடித்து, சில பேர்களைப் பிடித்து, அவர்களுக்குப் பாடம் கற்பித்து, நியாய ஸ்தலத்தில் சொல்லச் செய்துவிடுவார். முக்கிய விசாரணையில், அதாவது ஒரு கட்சியின் சாட்சி, அதே கட்சி வக்கீலால் விசாரணை செய்யப்படும்போது, ஒவ்வொரு சாட்சி சொல்லுவதும் நிஜம் என்றுதான் தோன்றும். குறுக்கு விசாரணையில், அதாவது ஒரு கட்சியின் சாட்சி எதிர்க் கட்சி வக்கீலால் விசாரணை செய்யப்படும்போது, ஒவ்வொரு சாட்சி சொல்லுவதும் பொய் என்றுதான் தோன்றும்.

நீதிபதி பல நாள் அநுபவமுள்ளவராகையால் எது உண்மை, எது பொய் என்று அறியக்கூடும் என்று நாம் எண்ணலாம். ஆனால், பல சமயங்களில் நீதிபதி தீர்ப்புக் கூறுவதில்லை. ஊரிலுள்ள வெவ்வேறு வாழ்க்கைத் துறைகளில் ஈடுபட்டுள்ள சிலரைப் பொறுக்கி, வழக்கு முழுவதையும் கேட்கச் செய்து, அவர்களையே நியாயம் வழங்கச் சொல்லி விடுவார்கள். இவர்களுக்கு 'ஜூரி' என்று பெயர். இவர்களெல்லாம் சாதாரண அறிவே உடையவர்களாதலால், சாட்சிகள் சொல்லுவதில் எது உண்மை, எது பொய் என்பதை அறிய முடியாதவர்களாகிறார்கள். வழக்கு ஒரு கதைபோல் அவர்களுக்குத் தோன்றுகிறது. அந்தக் கதையில் அவர்கள் உள்ளத்தை, வாதி பிரதிவர்திகளில் எவன் கவர்கிறானோ அவனுக்கு நியாயம் வழங்கிவிடுகிறார்கள்!

இதனால் என்னவாகிறது என்றால், எந்தப் பக்கம் சத்தியம் இருக்கிறதோ அதற்கு நியாயம் வழங்கப்பட்டது என்றில்லாமல், எந்தப் பக்கம் கற்பனைத் திறன் அதிகமிருக்கிறதோ அதற்கு நியாயம் வழங்கப்படுகிறது என்று ஆகி விடுகிறது!

ஒரு குற்றவாளி தண்டிக்கப்படாவிட்டால்கூடப் பரவாயில்லை. ஒரு நிரபராதி, குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டுத் தண்டனை அடைவதை நம்மால் பொறுக்க முடியுமா?

போலிகிராபரின் உதவியினால் இந்த அநியாயத்தை ஒரளவு தடுக்கலாம்.

சிகாகோவில் ஒரு வழக்கு வந்தது. பேக்கர் என்ற மர வியாபாரி, வெட்ஸல் என்பவன் தன்னிடம் ரூபாய் ஆயிரத்திற்கு மரச் சாமான் வாங்கிக்கொண்டு பணமே கொடுக்கவில்லை என்று வழக்குத் தொடுத்தான். வெட்ஸல் தான் பணம் அனுப்பிவிட்டதாகவும், பேக்கர் ரசீது அனுப்பவில்லை என்றும் கூறினான். ஜட்ஜுக்கு யார் சொல்லுவது உண்மை என்று தெரியவில்லை. அவர் எப்பொழுதும்போல் வக்கீல்களையும் சாட்சிகளையும் வைத்து வழக்கை நடத்தாமல், இருவரையும் போலிகிராப் பரீட்சைக்கு அனுப்பிவிட்டார்.

ரீட் என்ற போலிகிராப் இயக்குபவன் இவர்களைப் பரிசோதித்தான். வெட்ஸலை முதலில் நாற்காலியில் அமர்த்தி, கையையும் மார்பையும் சுற்றிப் பட்டைகளைக் கட்டினான். மற்ற ஆயத்தங்களையும் செய்துவிட்டு வழக்கு சம்பந்தமான கேள்விகளைக் கேட்கத் தொடங்கினான். வெட்ஸல் பதில் சொல்லிக் கொண்டே வந்தான். போலிகிராப் தன் ஐந்து கைகளாலும் கிறுக்கித் தள்ளிக்கொண்டே வந்தது. கேட்க வேண்டிய கேள்விகள் ஆனதும் ரீட், வெட்ஸலை வேறு அறைக்குப்

போய் உட்காரச் சொல்லிவிட்டு பேக்கரை அழைத்தான்.

பேக்கர் டக் டக்கென்று கேள்விகளுக்குப் பதில் சொன்னான். சோதனை முடிந்ததும் ரீட் பேக்கரை அந்த நாற்காலியிலேயே இருக்கச் செய்து அவனுக்கு சிகரெட் கொடுத்து உபசாரம் செய்தான். ''ஆகா! என்ன அற்புதமான இயந்திரம், பார்த்தீர்களா! உங்களுக்கு இது எப்படி வேலை செய்கிறது என்பதைக் காண்பிக்கிறேன்'' என்றான்.

பேக்கரின் கையில் ஒரு சீட்டுக் கட்டைக் கொடுத்து, ''இதிலிருந்து ஒரு சீட்டைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள். அது என்ன என்று எனக்குச் சொல்ல வேண்டாம். நான் ஒவ்வொரு சீட்டாகச் சொல்லிக்கொண்டே வருவேன். நீங்கள் எல்லாவற்றிற்கும் 'இல்லை' என்று சொல்லி வாருங்கள். நீங்கள் எடுத்த சீட்டு எது என்பதை நான் கண்டு பிடித்துவிடுவேன்'' என்றான்.

பேக்கர் ஒரு சீட்டை எடுத்துக் கொண்டான். ரீட் ஒவ்வொரு

21802



சிட்டாகக் கேட்க, பேக்கர் ஒவ்வொரு தடவையும் 'இல்லே' என்றான். ரீட் திடீரென்று நிறுத்தினான்.

''நீங்கள் ஆடுதன் பத்தைத் தான் எடுத்திருக்கிறீர்கள்! நீங்கள் பொய் சொன்னதை இயந்திரம் எனக்குச் சொல்லிவிட்டது'' என்றான்.

பேக்கருக்கு வியர்த்துக் கொட்டியது. முகம் வெளிறிப் போயிற்று. கடைசியில் தட்டித் தடுமாறி, ''நான் மறந்தாலும் மறந்திருப்பேன். வெட்ஸல் எனக்குப் பணம் கொடுத்திருக்கலாம். ஆமாம், இப்பொழுது ஞாபகம் வருகிறது'' என்று உளறியடித்தான்!

பேக்கர் வழக்கை வாபஸ் செய்துவிட்டான். இது போலவே இன்னும் பல சமயங்களில் நடந்திருக்கிறது. இதனால் கோர்ட்டில் வீண் செலவுகள் குறைகின்றன. பொய் வழக்குத் தொடருபவர்களே இது தடுக்கிறது. இதனால் குற்றவாளி அடைய வேண்டிய தண்டனையை அடைவதைத் தவிர நிரபராதிகள் பலர் தங்கள்மேல் சுமத்தப்பட்ட பழியிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல போலீஸ் இலாகாக்களில் இப்பொழுது போலிகிராபரை உபயோகிக்கிறார்கள். பல கொலேக் குற்றங்கள்கூட இதனால் நிருபிக்கப்பட்டிருக்கின்றன!

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளிலும், பாங்குகளிலும் புதிதாக வேலேக்கு வருகிறவர்களேப் போலிகிராபில் பரீட்சித்தே எடுத்துக் கொள்ளுகிறார்கள். பாங்குகளில் திருட்டுப் போனல் அநியாயமாகப் பலர் மேல் சந்தேகம் விழுகிறது அல்லவா? அதுவும் காஷியருக்குத் தான் முதல் 'குற்றவாளி'ப் பட்டம்! இந்தச் சங்கடங்களே போலிகிராப் நீக்கிவிடும். குறிப்பிட்ட ஒருவர் மேல் சந்தேகப்பட்டோம் என்று காண்பித்துக் கொள்ளலாம். எல்லோரையுமே பரிசோதித்துவிடலாம்.

ஆனல், வக்கீல்களுக்குத்தான், பாவம், இதனல் கஷ்டம். கோர்ட்டுகளில் வக்கீல்களே வைத்து வழக்கு நடத்தாமல், போலிகிராபருக்கே எல்லா வேலேயையும் கொடுத்துவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? ஐயோ, சட்டமே! உனக்கு எவ்வளவு மதிப்பு இருந்தது? எத்தனே பேர்கள் பணத்தைக் கொண்டு வந்து உன் காலில் கொட்டி உன் அருளேப் பெற்றார்கள்! உன் அருளேப் பெற்றுக் கடைசியில் உன்னேயே தனக்கு அடிமையாக்கிக் கொண்டார்கள்! சீக்கிரம் உனக்குச் சுதந்தரம் கிடைத்துவிடும் ஆனல் உனக்கு இனிமேல் என்ன மதிப்பு? உன்னேக் கற்க, கல்லூரிகளில் பையன்கள் போட்டி போட்டுக்கொண்டு வந்து சேரமாட்டார்களே! அப்புறம், நியாயஸ்தலங்களுக்கும், நியாயாதிபதிகளுக்கும் தான் என்ன முக்கியத்துவம் இருக்கிறது? போலீஸ் ஸ்டேஷன்களிலேயே போலிகிராபரை வைத்துப் பரிசோதித்துப் பல வழக்குகளே முடித்துவிடலாமே? மிகச் சில வழக்குகளிலேயே நியாயாதிபதிக்கும், வக்கீல்களுக்கும் அவசியம் ஏற்படும்.

இப்படிச் 'சட்புட்'டென்று வழக்குகள் முடிந்துவிட்டால், அப்புறம் சுவாரஸ்யம் எங்கே! தினசரி கோர்ட்டு வழக்குகளேக் கதைபோல் சுவாரஸ்யமாகப் படிக்கிறோமே, அது இனிமேல் முடியுமா?

அவ்வளவு தூரத்திற்குப் போலிகிராபரை நம்ப முடியாது என்று தான் நான் நினேக்கிறேன். எந்த இயந்திரத்தின் சிறப்பும் அதை இயக்குபவனின் சாமர்த்தியத்தைப் பொறுத்திருக்கிறது. தவிர அவனே உண்மையானவனக இருக்க வேண்டுமே! ஏதாவது லஞ்சம் வாங்கிக்கொண்டு இயந்திரத்தைத் தப்பாக ஓட்டினல்? அவனேயும் ஒரு போலிகிராபரால் பரிசோதனே செய்துவிடலாம் என்கிறீர்களா? அதைத்தான் எந்த அரிச்சந்திரன் செய்வது?



# காலம் மாறும்

'பூவண்ணன்'

அந்தத் தெருவின் முனையில் ஒரு குட்டிச் சுவர் இருந்தது. அதற்குப் பக்கத்தில் பெரிய மாடி வீடு இருந்தது. மாடி வீடு, அடிக்கடி குட்டிச் சுவரைப் பார்க்கும். 'அதைவிட நான் எவ்வளவு உயரமாக, அழகாக இருக்கிறேன்!' என்று எண்ணிப் பூரித்துப் போகும்.

சில சமயங்களில், தன் அழகையும் உயரத்தையும் குட்டிச் சுவரிடம் கூறி, அதன் அவலட்சணத்தையும் சுட்டிக்காட்டும். அப்போதெல்லாம் குட்டிச் சுவர், ''மாடி வீடே! வீணுகப் பெருமை பேசாதே. ஒரு காலத்தில் நானும் உன்னைப் போலவே உயரமாக, அழகாகத்தான் இருந்தேன். காலம் மாறியது. நான் குட்டிச் சுவராகி விட்டேன். நீ மட்டும் இப்படியே இருந்து விடுவாயா? காலம் மாறும்'' என்று கூறும்.

நாட்கள் சென்றன. ஒரு நாள் திடீரென்று பெருமழை பெய்தது. கடும்புயல் வீசியது. அதனால் பல வீடுகள் இடிந்து சரிந்து விழுந்து விட்டன. குட்டிச் சுவருக்குப் பக்கத்திலிருந்த மாடிவீடும் புயலால் இடிந்து தரைமட்டமாகியது. மாடி வீடு துக்கத்தோடும் வெட்கத்தோடும் குட்டிச் சுவரைப் பார்த்தது. குட்டிச்சுவர், ''நான் அப்போதே சொல்லவில்லையா? பார்! காலம் மாறிவிட்டது'' என்று சிரித்துக்கொண்டே கூறியது.

★

# நெல்லும் பொன்னும்

ஒரு சிறிய ஊர். அந்த ஊர் மக்கள் வயலில் உழுது பயிர் செய்து வாழ்ந்தனர். ஊருக்குப் பக்கத்தில் ஒரு மலை. அந்த மலையின் பாறைகளில் தங்கம் இருப்பதாக அறிந்தனர். உடனே எல்லோரும் அந்த ஊரை விட்டு மலைக்கு ஓடினர். வயல்களில் பயிர் செய்வதை விட்டுப் பேராசையால், தங்கம் எடுக்க ஆரம்பித்தனர். ஒரு கிழவன் மட்டும் அப்படிச் செல்லவில்லை.

அந்த ஊரைச் சுற்றியிருந்த வயல்களில் விளைந்த பயிர்கள் நீரற்று, கவனிப்பாரற்று வாடி, வதங்கி, கருகின. வயல்கள் தம்




அழகை இழந்தன. இவ்வளவு நாள் அந்த ஊர் மக்களுக்கு உணவு கொடுத்ததை மறந்து, திடீரென்று தம்மைக் கவனிக்காமல் விட்டுவிட்டனரே என்று கஷ்டப்பட்டன பயிர்கள். மலைக்கு வந்த திடீர் வாழ்வைக் கண்டு பொறாமையும் அடைந்தன. ஆனால் அந்த ஊரில் தங்கிய கிழவன் மட்டும் ஒரு சிறு வயலில் பயிர் செய்து கொண்டிருந்தான்.

நாட்கள் சென்றன. மக்கள் வயல்களை அடியோடு மறந்து மலைப்பாறைகளை உடைத்து, உருக்கிப் பொன் எடுத்தனர். தாங்கள் சேகரித்த பொன்னைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். நாளடைவில் அவர்களிடமிருந்த உணவுப் பொருள்கள் குறைந்தன. பொன் அதிகமாகியது. ஒரு நாள் உணவுப் பொருளே தீர்ந்து விட்டது. மக்களுக்குப் பசி! அதிகப் பசி!

"உணவு இருக்கிறதா? அரிசி இருக்கிறதா?" என்று அலைந்தனர். எங்கும் உணவு கிடைக்கவில்லை. உடனே தாங்கள் சேகரித்த பொன்னை எடுத்துக்கொண்டு, பசியோடு ஊருக்கு வந்தனர். தங்களுடன் தங்கம் எடுக்க வராமல் தங்கிவிட்ட கிழவனிடம் சென்றனர். "கிழவா! நெல் இருக்கிறதா? உணவு இருக்கிறதா? சீக்கிரம் கொடு! விலையாக என்னிடம் உள்ள எல்லாப் பொன்னையும் தந்து விடுகிறேன்" என்று ஒவ்வொருவரும் கேட்டனர். உணவு இல்லாததினால் மிக விலையுயர்ந்த தங்கம் நெல்லின் முன்னே வெறும் கல்லாகத் தெரிந்தது.

கிழவன் சிரித்தான். "உயிரைக் காக்கும் நெல்லைத் தரும் வயலை விட்டு, உடலை அழகு செய்யும் பொன்னைத் தேடிச் சென்றீர்கள். இப்பொழுது உங்களிடமிருக்கும் பொன்னும் மண்ணும் ஒன்றுதான். நெல்தான் நிலையான தங்கம். அதைத் தரும் வயல்தான் அழியாத செல்வம். இனி வயலைப் பிரிந்து வறுமையடைய வேண்டாம்" எனக் கூறித் தன்னிடமிருந்த நெல்லை அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தான்.

மக்கள் பொன்னை மறந்து பழையபடி உழவு செய்தனர்; வயல்கள் செழித்தன; தங்கள் வளத்தைக் கண்டு மகிழ்ந்தன. பசியை விரட்டி விரட்டி அடித்தன.

கவிஞர் வரிசை: 11

# துறவரசர் இளங்கோ

கி. வா. ஜகந்நாதன்

சிங்காதனத்தில் சேர மன்னன் வீற்றிருந்தான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பது அவன் பெயர். அவனுக்குப் பின் ஓராசனத்தில் அவனுடைய குமாரர் இருவரும் அமர்ந்திருந்தனர். மூத்தவன் செங்குட்டுவன். இளையவன் பேர் தெரியவில்லை; இளங்கோ என்று சொல்வார்கள். சின்ன ராஜா என்று அதற்கு அர்த்தம். மந்திரிகளும் வேறு பெரியவர்களும் அரசனுடைய அவையில் இருந்தார்கள்.

அப்போது ஜோசியம் சொல்கிறவன் ஒருவன் அங்கே வந்தான். அவனை நிமித்திகன் என்றும் சொல்வார்கள். அங்க அடையாளங்களைக் கண்டே அவன் ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைச் சொல்லும் ஆற்றல் படைத்திருந்தான். அரசனிடம் தன் திறமையைக் காட்டிப் பரிசு பெறலாம் என்ற விருப்பத்தோடு அவன் அரசசபைக்கு வந்திருந்தான்.

அவன் தன்னுடைய பிரதாபங்களை எல்லாம் சொல்லிக் கொண்டான். ''அந்த ஊருக்குப் போனேன். அந்த ராஜாவைக் கண்டேன். அவர் முகத்தைப் பார்த்தே ஜோசியம் சொன்னேன். இன்ன இன்ன பரிசுகளைப் பெற்றேன்'' என்று விரிவாகச் சொன்னான். சபையில் இருந்த அனைவர்க்கும் தங்களைப் பற்றி ஜோசியம் கேட்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. அரசன் வீற்றிருக்கும் போது அவர்கள் எப்படிக் கேட்பது?

ஜோசியன் சுற்று முற்றும் பார்த்தான். அரசகுமாரர்கள் இருவரும் வீற்றிருக்கும் ஆசனத்தில் அவன் பார்வை சென்றது. தேசு தவழும் முகத்தையுடைய இளைய குமாரருடைய திருமேனியைக் கூர்ந்து கவனித்தான். அவரைப் பற்றி ஜோசியம் சொல்லத் தொடங்கினான்.

''அரசே, இதோ வீற்றிருக்கிறாரே, இவருடைய அங்க அடையாளங்களைப் பார்த்தேன். இவர் ஓர் அரசுக்குத் தலைவராவார். அதற்கு ஏற்ற குறிகள் இவர் முகத்தே காணப்படுகின்றன'' என்று சொன்னான்.

அதைக் கேட்டுச் சபையில் உள்ளவர்கள் திடுக்கிட்டார்கள். ''இவன் இவ்வளவு தைரியமாகப் பேசுகிறானே! யாரிடம் எதைச் சொல்கிறோம் என்று யோசித்துப்

---



**கிட்டு:** டேய் ராஜு, நீ பத்திரிகைகளுக்கு ஆனை, குதிரை, குருவி இவைகளைப் பற்றியெல்லாம் கவிதை எழுதுகிறாயாமே, ஒரு கழுதையைப் பற்றி ஏன் எழுதக் கூடாது?

**ராஜு:** சே சே! அதுக்கெல்லாம் உன்னோடு இன்னும் கொஞ்சம் பழகினால்தான் எழுத முடியும்.

—R. சரஸ்வதி, ஒழுகினசேரி.



'பேசவேண்டாமோ?'' என்று பெரியவர்கள் எண்ணினார்கள்.

மூத்த குமாரனாகிய செங்குட்டுவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டியிருந்தான் அரசன். அவனே நெடுஞ்சேரலாதனுக்குப் பின் அரசனாக வருவதற்கு உரிமை உடையவன். அதுதான் முறை. அப்படி இருக்க, அவன் தம்பிக்கு எப்படி அரசு கிடைக்கும்?

'ஒருகால் செங்குட்டுவன் குறையாயுள் பெற்றவனோ! அப்படியானால் இந்தப் பைத்தியம் அதை இவ்வளவு பேருக்கு நடுவில் சொல்லலாமோ?'' என்று சிலர் கவலைப்பட்டார்கள்.

சில கணங்கள் சபையில் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. அரசனும் ஒன்றும் பேசவில்லை. செங்குட்டுவன் என்ன எண்ணினான் என்பதும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இளங்கோவின் முகம் மாத்திரம் சிவந்தது, கண் கனலைக் கக்கியது. அவர் அந்த நிமித்திகனை நோக்கி, ''நீர் பெரிய ஆரூடம் சொல்லிவிட்டதாக எண்ணிப் பெருமை அடைய வேண்டாம். உம்முடைய ஜோசியத்தை நான் பொய்யாக்கப் போகிறேன்'' என்று சொன்னார். அவர் குரலில் கோபம் தொனித்தது.

சபையினர் அவரையே கவனித்துக்கொண் டிருந்தார்கள். இந்தத் தர்மசங்கடமான நிலையில் அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று எல்லோரும் காதை நெறித்துக் கொண்டு கேட்டார்கள்.

''நீர் முறை அறியாமல் கூறினீர். தமையனார் இருக்கும்போது நான் அரசைப் பெறுவதாவது! அப்படி எந்தக் காரணத்தாலும் நேர இடம் இராது. இதோ நான் சொல்வதை யாவரும் கேளுங்கள். நான் துறவு பூண நிச்சயம் செய்துவிட்டேன். எனக்கும் இந்தக் குடிக்கும் உள்ள உறவு முறையையும் துறந்துவிட்டேன். ஞானப் பேரரசைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுத் தவம் புரிந்து என் வாழ்நாளைக் கழிப்பேன். செங்குட்டுவன் இந்த நிமித்திகன் பேச்சைப் பொரு

ளாகக் கருத வேண்டாம்'' என்று சிங்கம் முழங்குவதுபோல அவர் பேசினுர். சபையில் உள்ளோர்



மிக்க அமைதியுடன் அதைக் கேட்டார்கள். சேர அரசன் பிரமித்துப் போனுன். செங்குட்டுவனே ஒன்றும் தெரியாமல் விழித்தான்.

''இதோ, இப்போதே அரசர் பெருமானிடம் விடைபெற்றுக் கொள்கிறேன். இனி எனக்கு இருப்பிடம் அரண்மனை அல்ல. இந்த மாநகரத்தின் கீழ் வாயிலில் உள்ள மடம் இருக்கிறதே, அதுவே என் வாழ்க்கையிடமாக இருக்கும்'' என்று புறப்பட்டுவிட்டார்.

இப்படித் துறவு பூண்டவரே இளங்கோவடிகள் என்னும் புலவர். அவர் சேரர் குலத்தில் உதித்தாலும் அரச குமாரர்களுக்குரிய இன்ப வாழ்க்கையில் ஈடுபடாமல் அதைத் தியாகம் செய்துவிட்டுத் தவவாழ்க்கையை மேற்கொண்டார். அதனுல் அவருக்கு இளங்கோவடிகள் என்ற பெயர் உண்டாயிற்று. இப்பொழுதெல்லாம் சுவாமிகள் என்று சொல்வது இல்லையா? அதே பொருள் உடையதுதான் அடிகள் என்ற சொல்லும்.

இளங்கோவடிகள் நல்ல தமிழ்ப் புலமை உடையவர். கோவலன் கண்ணகி கதையை அழகிய காவியமாகப் பாடினுர். அதற்குச் சிலப்பதிகாரம் என்று பெயர். தமிழ் நாட்டில் இருந்த சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று மன்னர்களைப் பற்றியும் மூன்று நாடுகளைப் பற்றியும் அவர் விருப்பு வெறுப்பு இல்லாமல் பாடியிருக்கிறுர். அந்தக் காலத்துத் தமிழ் நாட்டில் கலையும் தொழிலும், இசையும் இயலும், கூத்தும் விளையாட்டும், நாகரிகமும் பண்பாடும் எப்படி வளர்ந்தன என்பதை அவர் நூலில் நன்ருகக் காணலாம். அதில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று வகையான தமிழும் இருப்பதனுல் அதை முத்தமிழ்க் காப்பியம் என்று சொல்வார்கள். கண்ணகியினுடைய பெருமையை அது மிக நன்ருக எடுத்துச் சொல்கிறது.

இளங்கோவடிகள் மண்ணை ஆளும் அரசைத் துறந்தாலும் ஞானச் செல்வத்தை ஈட்டினுர். புவியரசராக வாழாவிட்டாலும் கவியரசராக வாழ்ந்தார். அதை விடப் பெரிய பெருமை வேறு ஒன்று உண்டா?

---



பையன்: நீங்கள் எல்லாரும் போன உடனே நாங்கள் ஜிலேபி தின்னப்போகிறேம்!

# மண் தின்ற கண்ணன்

எஸ். கே. ராவ்

செல்லப்புத்தூர் அழகான கிராமம். நல்ல வளமுள்ள வயல்களையுடையது. ஆற்றுக்கு அடுத்தாற்போல் இருந்ததால் நல்ல தண்ணீர் வசதி. அங்கே பயிர், பச்சைக்குக் கேட்பானேன்! ஒரு குறைவும் இல்லாமல் எல்லாம் நிறையக் கிடைத்தது. அவ்வளவு இருந்தும் மனித சுபாவம் சும்மா இருக்குமா? சண்டை பூசல்கள் இல்லாவிட்டால் வாழ்க்கையே ரசமற்றதாக ஆகிவிடும் என்று எண்ணக்கூடியவர்கள் அந்த ஊரில் இல்லாமல் இல்லை.

வயலுக்கு வரப்பு ஒரு சாண் தள்ளி இருப்பதாகவும் அதைச் சரியாகத் தள்ளிப் போடாவிட்டால் 'ஒரு கை' பார்த்துவிடுவதாகவும் மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு நாராயணசாமி நின்றான். பக்கத்து வயல் சொந்தக்காரன் பட்டப்பன், "உங்க தாத்தா வந்தாலும் என்னிடத்தில் காரியம் பலிக்காது. நீ செய்வதைச்



செய்'' என்று தோளைத் தட்டிக் காண்பித்தான். இந்த விதமாக வார்த்தைகள் வளர்ந்து கொண்டே போய், சண்டையாக மாறிவிட்டது. இது முற்றியதும் ஒருவருக்கொருவர், ''கழுத்தை வெட்டி, தலையையே அப்புறப் படுத்திவிடுகிறேன், பார்'' என்று சபதம் செய்யும் நிலைக்கு வந்து விட்டார்கள். மறு நாள் முடிவு கட்டுவதாக இருந்தார்கள்.

அதற்குள் இவர்கள் கர்ஜனையில் ஆகாயம் கிடுகிடுத்துவிட்டது போல் வானம் மூடு இருட்டாக மூடிக்கொண்டது. அன்று சாயந் தரமே மழை பிடித்துக்கொண்டு கொட்டு, கொட்டென்று விடாமல் மூன்று நாட்கள் கொட்டிவிட்டது. ஊரெல்லாம் வெள்ள மயமாக ஆகிவிட்டது. வயல், வரப்பு என்ற வித்தியாசம் தெரியாமல் எல்லாம் ஒரே சமமாகத் தரை மட்டம் ஆகி விட்டது. அந்த மூன்று நாட்களும் ஒருவராவது வெளிக்கிளம்ப முடிய வில்லை. மழை நின்ற நான்காம் நாள் நாராயண சாமியும் பட்டப் பனும் மற்றவர் களுடன் வயல் களைச் சுற்றிப் பார்க்கப் போனார் கள். வெள்ளத் தால் ஆற்று மண லும் வண்டலுமாக வயல்கள் எல்லாம் நிறைந்து தூர்ந்து போய்விட்டது. அவரவர்கள் தங்க ளுடைய வயலை எல்லை வகுத்து எங்கே பொழி இருக்கிறது என்ப தையே கண்டு பிடிக்க முடியாமல் போய்விட்டது. எல்லாம் சமமாக ஆகிவிட்ட போது, வரப்பு ஒரு சாண் தள்ளி இருப்பதா கத் தான் எண்ணி யதை மாற்றிக் கொள்ளாமல் வேறு என்ன செய்வது! ஏற்றத் தாழ்வு, கூடுதல், குறைவு என்ற உணர்ச்சியை இழந்து, உள்ளம் சம நிலையை அடைந்து விட்டது. நாராயணசாமிக்கும் பட்டப்பனுக்கும் என்ன செய்வ தென்ற பலத்த யோசனை மனத்தை கலக்கியது. அவர்களும் மற்றவர் களுடன் கலந்துகொண்டு வண்டல் வடிந்திருப்பதை எப்படி அகற்று வது என்பதைப்பற்றி ஆலோசித் தார்கள். எல்லோரும் ஒன்றுகூடித் தீர்மானித்து, அவரவர்களுடைய நிலம் என்ற மனப்பான்மையை விட்டுவிட்டு, கிராமத்தார் எல் லோருமாக வயலில் இருந்து வண்டலை அப்புறப்படுத்தும் வேலை யில் தீவிரமாக ஈடுபட்டார்கள். அப்பொழுது பட்டப்பன் வயலில் வரப்புப் போடும்போது நாராயண சாமியும் இருந்தான். பழைய சண்டையை மறந்து அவனே வரப்பை முன்பு இருந்தபடியே போட்டுக் கொடுத்தான். இப் பொழுது எல்லாம் சரியாகி விட்டது. புது வாழ்வில் அவர்கள் இருவரும் ஒருமித்த மனத்துடன் சாகுபடி செய்தார்கள். ஒருவரை ஒருவர் கலந்து ஆலோசிக்காமல் இப்பொழுதெல்லாம் எதையும் செய்வதில்லை.



* * *

கோகுலத்தில் ஆயர் சிறுவர் கள் எல்லாரும் சேர்ந்து விளையா டும்போது, நல்ல வசதியான வீடு ஒன்று கட்டினார்கள். அவர்களே மண்ணைச் சுமந்து வந்தும் மரத்தை வெட்டியும் முனைந்து கட்டி முடித் தார்கள். அதுவரை ஒன்று கூடி, காரியத்தைச் செய்து முடித்தவர் களுக்குள் ஒரு சிறு விஷயத்தில் மன வேற்றுமை ஏற்பட்டுவிட்டது. அதற்கெனத் தனியாக இடம் ஒதுக்கியிருந்தார்கள். ஒன்றை முதலில் செய்தால் தேவலை என்று ஒருவன் சொன்னான். அது கூடாது என்று மற்றொருவன் மறுத்தான். இப்படி வார்த்தை எழுந்து, கடைசியில் சண்டையாக வலுத்து விட்டது. முடிவில், ''நான் சுமந்து கொண்டு வந்த மண்ணை நான் எடுத்துக்கொண்டு போய்



டாக்டர்: நம்ம பையனுக்குக் கார் வாங்கித் தரலாம்னு யோசனை.

ஒருவர்: நல்ல யோசனைங்க. உங்களுக்கும் நிறைய கேஸ்கள் வரும்!

---

விடுகிறேன்'' என்றான் ஒருவன். மற்றவன், ''மரத்தைத் தூணுக்காகக் கொண்டு வந்தேன். அதைக் கொண்டுபோய் விடுகிறேன்'' என்றான். கடைசியில் குழப்பம் ஏற்பட்டு வீட்டையே நிலைகுலையச் செய்துவிடும்படியான தீர்மானத்துக்கு வந்துவிட்டார்கள் இந்தச் சண்டையைப் பக்கத்தில் நின்றுகொண்டு பார்த்தான் கண்ணன். கண்ணனுக்கும், பலராமனுக்கும் இவர்கள் எல்லாம் தோழர்கள். இவர்கள் சேர்ந்து ஒன்றுகூடி விளையாடுவதுதான் வழக்கம். ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படலாமா? இந்த விஷயத்தில் இவர்களுக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டும் என்று கண்ணன் தீர்மானித்தான். அங்கே சண்டை நடந்துகொண்டு இருக்கும்போதே வீடு கட்டின இடத்திலிருந்து ஒரு களிமண் உருண்டையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு விழுங்கி விட்டான். ஆயர்பாடிச் சிறுவர்களுக்குக் கண்ணனிடம் மிகுதியான அன்பு உண்டு. அவனிடம் தங்கள் உயிரைவிட மேலான அன்பு கொண்டிருந்தார்கள். அதனால் கண்ணன் களிமண் உருண்டையை விழுங்கி விட்டான் என்பதைப் பார்த்தவுடன் எல்லோரும் பதைபதைத்துப் போனார்கள். சண்டையெல்லாம் மறந்து போயிற்று. தவியாகத் தவித்துக்கொண்டு ஓடோடியும் வந்து கண்ணனின் தாய் யசோதையிடம் சொன்னார்கள். கண்ணனை யசோதை கண்டித்தாள்.

''இப்படி நீ மண் தின்னலாமா? உடம்புக்கு ஆகாதே. இப்பொழுது நான் என்ன செய்வது!'' என்று வருந்தினாள் கண்ணன் ஒன்றும் நடக்காததுபோல், ''அவர்கள் எல்லாம் பொய் சொல்கிறார்கள், அம்மா! நீ அவர்கள் சொல்வதை நம்பாதே!'' என்றான். உண்மை தானா என்று பலராமனைக் கேட்டாள் யசோதை. ''உண்மைதான்; கண்ணன் மண்ணைத்தான் தின்று விட்டான்'' என்றான் பலராமன். யசோதை கோபத்துடன் கண்ணனது இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு வாயைத் திறந்து காண்பிக்கச் சொன்னாள். கண்ணன் பயந்துகொண்டு, ''அம்மா, நான் மண் சாப்பிடவில்லை. அண்ணா பொய் சொல்கிறான். இதோ, பார்!'' என்று மெதுவாக வாயைத் திறந்தான். பார்த்த யசோதை திடுக்கிட்டாள். சகல ஜீவராசிகளும், பூமி, வானம் உலகங்கள் யாவும் அங்கே கண்ணன் வாய்க்குள் தெரிந்தன. தன்னையும் கண்டாள். யசோதைக்குத் தலை சுற்றியது. பக்கத்தில் நின்ற ஆயர் பாடிச் சிறுவர்களும் இதைக் கண்டதும் தங்களுடைய அறியாமையால் போட்ட சண்டையை மறந்தார்கள். 'எல்லாம் கண்ணனுடையதாக இருக்கும்போது நாம் புத்தியில்லாமல் சண்டை போட்டுக் கொண்டோமே' என்று வெட்கம் அடைந்தார்கள். நடந்ததை மறந்து மறுபடி கண்ணனை அழைத்துக்கொண்டு போனார்கள். தாங்கள் கட்டி இருந்த இடத்தில் கண்ணனை ராஜாவாக முடி சூட்டி, மந்திரிகளாகவும் மக்களாகவும் இருந்து விளையாடினார்கள்.



# போட்டி

மேரியண்ணு

லீலாவும் செல்வமும் பார்த்த சாரதி ஆரம்பப் பாடசாலையில் ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள். செல்வத்தின் தந்தை சந்திரசேகர் அந்த ஊருக்குப் பழைய டாக்டர்; வெகு நாட்களாகவே ராம்ஜி நகரில் குடியிருப்பவர். டாக்டர் நாகராஜனோ — அவர்தான் லீலாவின் அப்பா, அங்கு வந்து தொழில் செய்ய ஆரம்பித்து ஆறு மாதங்களே ஆயின.

கொஞ்ச காலத்துக்குள்ளாகவே ராம்ஜி நகர்வாசிகளைக் கவர்ந்து விட்டார் நாகராஜன். அவருடைய அன்பான சுபாவத்தினால் அவருக்கு நல்ல வருமானம் கிடைத்து வந்தது.

அதே சமயத்தில் டாக்டர் சந்திரசேகருக்குத் தொழில் சரியாக நடக்கவில்லை. ஏதோ கையில் 'இருப்பு' இருந்ததால் சமாளித்துக்கொண்டு வந்தார். அவருக்கு நாகராஜன் மேல் ரொம்பவும் பொறுமைதான். என்ன செய்வது..? அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் புதிய டாக்டரோடு உறவாடி வந்தார். அதிலும், தினசரி வீட்டிற்கு வந்து பாடசாலைக்குச் செல்வத்தைக் கூட்டிப் போகும் லீலாவிடம் சந்திரசேகருக்குப் பிரியம். அவள், ''டாக்டர் மாமா'' என்று செல்லமாக அழைக்கையில் தன்னை மறந்துவிடுவார். என்னதான் லீலா அன்புடன் நடந்து கொண்டாலும் டாக்டர் நாகராஜனை நினைக்கும்போது முகத்தைச் சுளித்துக் கொள்வார். அவர் மனம் கறுவிக்கொண்டிருந்தது. மனித மனத்துக்குப் பொறுமையை ஆண்டவன் கொடுத்திருக்கக் கூடாது. போட்டி போட்டுக்கொண்டு போராடும் மனித இனத்தைவிட புத்தியில்லாத மிருகஜாதி எவ்வளவோ மேல்!

அன்றைக்கு மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் லீலா வரவில்லை; செல்வம் மட்டும்தான் போனான். பாடசாலையிலிருந்து திரும்புகையில், வானம் கத்திக்கொண்டு அழ ஆரம்பித்தது. கொஞ்ச தூரம்தானே என்று வீட்டிற்கு ஓட்டம் பிடித்தான் செல்வம். நுழையும்போது தெப்பலாக நனைந்திருந்தான்; அம்மா அவசர அவசரமாக, சேலைத் தலைப்பால் துவட்டி விட்டு, புத்தாடை உடுத்தி, சூடான காபியையும் கொடுத்தாள். செல்வத்துக்கு ஏற்கனவே பலவீனமான உடல்.. ராத்திரி பத்து மணிக்குமேல் ஜுரம் கண்டுவிட்டது. டாக்டர் சந்திரசேகர் ஏதேதோ செய்யப் போனார். ஆனால் குறுக்கிட்டாள் செல்வத்தின் தாய். ''சொந்த வைத்தியம் சொஸ்தமாக்காதுங்க.. சொல்றேன்னு கோபப்படாமெ போய் டாக்டர் நாகராஜனைக் கூட்டிவாங்க'' என்றாள்.

அவ்வளவுதான், முகத்திலே கோர தாண்டவமாடியது கோபம்; பொறுமை விசுவரூபம் எடுத்தது; போட்டி மனப்பான்மை தலை தூக்கியது. டாக்டர் சந்திரசேகர், ''தாரகம், செல்வம் சாகட்டும். கவலையில்லை..நான் நாகராஜன் கிட்டே போகமாட்டேன். நானே



தான் வைத்தியம் பார்க்கப் போகிறேன்..'' என்று செல்வத்தைச் சோதனை செய்யத் தொடங்கினார். குளிர் ஜுரத்தால் உளறிக் கொட்டிக்கொண்டிருந்த அவனுக்கு மருந்தையும் கொடுத்தார்.

கொடுத்தும் என்ன? விதி வசத்தாலோ என்னவோ செல்வம் பெற்றோரைக் கதறியழும்படி செய்துவிட்டுப் போய்விட்டான். ஆனால், ''டாக்டர் நாகராஜன் மருந்து கொடுத்திருந்தால் செல்வம் பிழைத்திருப்பானோ?'' என்ற எண்ணம் ஏற்படவே நாகராஜன் மேல் அவருக்குத் தீராத கோபம் உண்டாகி விட்டது.

வஞ்சம் தீர்த்துக் கொள்ளப் புலியைப்போலப் பதுங்கி இருக்கிறோம். சந்தர்ப்பம் வரும் போது பாய்ந்து விடுகிறோம்.. எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் டாக்டர் சந்திரசேகருக்கு வந்து விட்டது. இத்தனை நாள் எதற்காகக் காத்திருந்தாரோ, அந்தக் காரியத்தைச் செய்ய..எப்படித்தான் மனம் துணிந்ததோ?

ஒரு நாள்—நாகராஜனின் மகள் அழுதுகொண்டே சந்திரசேகர் வீட்டிற்குள் நுழைந்தாள். அப்போது டாக்டர் ஏதோ வேலையாய் இருந்தார்; அதனால் லீலா வந்ததை அவர் கவனிக்கவில்லை. விசித்து விசித்து அழும் சப்தத்தைக் கேட்டுத் திரும்பிய சந்திரசேகர், ''ஏம்மா..லீலா, ஏன்?'' என்றார்.

''அப்பாவுக்கு உடம்பு காயுது. அம்மா மருந்து வாங்கியாறச் சொன்னாங்க.''

''மருந்தாம்மா வேணும்..?''—வாய்தான் இப்படிக் கேட்டதே யொழிய சந்திரசேகரது மனம், 'சந்தர்ப்பத்தை நழுவ விடாதே.. ஹூம்..ஏன் தயக்கம்? நாகராஜன் உன் வரைக்கும் நாகசர்ப்பம்..கொன்றுவிடு!' என்றது.

''இரும்மா வர்றேன்..'' என்று உள்ளே போனவர் 'பாய்ஸன்' புட்டியுடன் வந்தார். லீலாவின் கையில் அதைக் கொடுக்கும்போது நடுக்கந்தான் அவருக்கு. இதையெல்லாம் அறிந்துகொள்ளாமல் சிறுமி லீலா மருந்தை வாங்கியது தான் தாமதம்—விடு விடுவென வெளியே சென்றுவிட்டாள்.

அவள் சென்று ஐந்து நிமிஷங்கள் ஆகியிருக்கும். டாக்டர் சந்திரசேகருக்கு ஆட்டம் கண்டுவிட்டது: ''போட்டி எவ்வளவு கேவலமான நிலைக்கு கொண்டுவந்து விட்டது..கொலை செய்வதென்றால்..? ஐயோ..! உடனே போய் நாகராஜனைக் காப்பாற்று, குழந்தை விஷத்தைக் கொடுப்பதற்குள்..போ..''என்று யாரோ தன்னுள் இருந்துகொண்டு கத்துவது போல் அவருக்குத் தோன்றவே, விரைந்து ஓடினார், கார் ஷெட்டுக்கு..'ஸ்டார்ட்' செய்யும் சமயத்தில் தெருக்கோடியில் லீலா வேகத்தோடு வருவதைக் கவனித்தார்.

''ஆ..லீலா அலறிக் கொண்டல்லவா வருகிறாள்?''—இப்படிக் கூறிக்கொண்டே, காரை விட்டு இறங்கிய சந்திரசேகர் விருட்டெனப் பாய்ந்து அறைக்குள் நுழைந்து கதவுகளை சாத்தப் போனார். அதற்குள் இரைக்க இரைக்க ஓடிவந்த லீலா உள்ளே அவரைக் கண்டதும் 'கோ'வென்று கதற ஆரம்பித்தாள்.

டாக்டருக்கு நிலைமை புரிந்து விட்டது, அவராகத் தட்டுத் தடுமாறிக்கொண்டே, ''லீலா, அப்பாவுக்கு என்ன?'' என்று கேட்டார். ''டாக்டர் மாமா..வந்து, நீங்க கொடுத்த மருந்து..வழியிலேயே கொட்டிப் போச்சு..!''

சந்திரசேகர், ''அப்படியாம்மா..!'' என்று வாயைப் பிளந்தார்..ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துக்கூடப் போனார்.

சிறிது நேரம் சென்ற பிறகு, ''நானும் வரேம்மா....நல்ல மருந்தா கொண்டுபோவோம்..'' என்று அவர் லீலாவின் கையிலிருந்த காலி 'பாய்ஸன்' பாட்டிலை வாங்கினார். வாங்கியதும் டாக்டர் சந்திரசேகரது கண்களில் பட்டது, அந்தப் பாட்டிலில் ஒட்டியிருந்த 'லேபிள்'தான்....வியப்போடு அதில் அச்சிட்டிருந்த வார்த்தைகளை படித்த அவரது வாய், ''இது 'பாய்ஸன்' அல்ல..காய்ச்சல் மருந்து!'' என்று முணுமுணுத்தது;

கதை; ஆர்வி

# புலிக்குட்டி

சித்திரம்: ஸாமி




இரண்டு வருஷ காலத்தில் கோட்டை எழும்புகிறது. புலிக்குட்டியின் பெயர் நாடெங்கும் பரவுகிறது. மக்கள் புலிக்குட்டியின் பெயரைக் கேட்டாலே நடுங்கினார்கள் . . . . .
ஒரு நாள் நடுப்பகலில் . . . . . .
அதோ! ஏதோ ஒரு கோட்டை தெரிகிறதே!
இங்கெல்லாம் ஆதித்த சோழருக்கு எதிரிகள் அதிகம். நாம் ஜாக்கிரதையாகப் போய்ப் பார்க்க வேண்டும்.
டேய்; இதென்ன ஆச்சரியம்! இவனைப் பார்த்தால் நமது இளவரசர் மதுராந்தகனைப் போல் இருக்கிறதே!
ஆமாம்; அதே அச்சுத்தான்! அதே சாயல்தான்! ஒரு சமயம் இவன்தான் காணாமல் போன இளவரசனாக இருக்குமோ!




(தொடரும்)

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

| | | |
|---|---|---|
| திருவத்திபுரம் (வ ஆ) | உபதலைவர்: | எம். குப்புசாமி |
| | செயலாளர்: | வீரா. விநாயகம் |
| | பொருளாளர்: | என். ஜி. அண்ணுமலை |

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மண. அரங்கசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'புன்னகை' என்ற மாத இதழ் கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கதை, கட்டுரைகளை, ஆசிரியர், 13, ராயர் தெரு, திருவத்திபுரம் என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| நாகூர் | உபதலைவர்கள்: | ஜி. ஐயராமன், |
| | | ஜி. தேவாசீர்வாதம் |
| | காரியதரிசிகள். | முருகையன், |
| | | எம். டி. ராமசந்திரன் |

கிளைக் கழகத்தின் ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு மேல் கண்ட புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விழாவை ஒட்டிக் கண்காட்சி ஒன்றும் நடத்தப்பட்டது. தமிழ், ஹிந்தி, ஆங்கில நாடகங்களும் பல போட்டிகளும் விழாவை மேலும் சிறப்புறச் செய்தன.

சேலம், செந்தமிழ் சிறுவர் சங்கத்தினர் ஜுலை மாதம் ஆண்டு மலர் (கையெழுத்துப் பிரதி) ஒன்று வெளியிட இருக்கிருர்கள். மலருக்கு கதை, கட்டுரை அனுப்ப விரும்புபவர்கள் காரியதரிசி, 56, உடையார் தெரு, சேலம் டவுன் என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| மதுக்கரை | உபதலைவர்கள்: | A. காளிச்சாமி |
| | | V. கண்ணுச்சாமி |
| | செயலாளர்: | A. நடராஜன் |
| | துணைச்செயலாளர்: | N. சண்முகம் |
| | பெருளாளர்: | K. கோவிந்தன் |

நான்காவது ஆண்டுக்குரிய புதிய நிர்வாகிகள் மேற்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 'செல்வன் படிப்பக'மும் 'முயல்' என்ற மாதாந்தரக் கையெழுத்துப் பத்திரிகையும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. மற்றக் கிளைக் கழகத்தினர் A. நடராஜன், கதவு எண். 32 K. டைப், A. C. C., மதுக்கரை என்ற விலாசத்துக்கெழுதி தொடர்பு கொள்ளலாம்.

# பேனு நண்பர்கள்

1. S. சுப்பையா, வலம்புரி 3-வது ரோடு, வளையப்பட்டி, திருச்சி ஜில்லா.
2. C. நரசிம்மன், இளம்பிள்ளை போஸ்டு, சேலம் ஜில்லா.
3. D. அப்பாய், S/o T. S. A. தண்டபாணி செட்டியார், ஜவுளி வியாபாரம், பெண்ணுடம்.
4. P. கணேஷ், மகாதேவ் பங்களா பிளாக், C/o S. பூர்ணையா, தரம்பேட், நாகபுரி.
5. E. V. கிருஷ்ணமூர்த்தி, 52, பெரிய தெரு, திருவண்ணுமலை.
6. K. நடராஜன், C/o K. பாலகிருஷ்ணன், 10, கஸ்பா ரோடு, ஆம்பூர், (வ. ஆ).

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5


# விற்பனையாகின்றன!

விஷமக் கொடுக்கான ரகுவை, பட்டணத்துக்கு அனுப்பி னல் அடங்கிவிடுவான் என்று எண்ணுகிருர்கள். ஆனல் புறப்பட்ட ரெயிலிலேயே முதலில் தன் கைவரிசையைக் காட்டுகிருன் அவன். பள்ளிக்கூடத்தையே இரண்டு செய்கிருன். அவனைக் கண்டால் தெருவே நடுங்குகிறது.

அடேயப்பா, அவன்தான்

## அபாயச் சங்கு

— நீலம் எழுதியது —

விலை 8 அணு

பாக்தாத் இளவரசனையும் கயூர் அரசகுமாரியையும் இரண்டு பூதங்கள் சேர்த்து வைத்துப் பிறகு பிரித்து விடுகின்றன. பாரஸீக ரோஜா அவர்களைச் சேர்த்து வைக்கிறது.

அராபியக் கதையைத் தழுவிய சித்திரக் கதை

## பாரஸீக ரோஜா

விலை 5 அணு

இரண்டும் தபாலில் வேண்டுவோர் 15 அணு மணியார்டர் செய்யவேண்டும்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள் 13 அணு அனுப்பினுல் போதும்.

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.